# இயேசுவின் நற்செய்தி

## சுவிசேஷரீதியான தொடர்
## முன்னோடி சுவிசேஷஊழியம் தொடர்

Christy Akins Brawner



# இயேசுவின் நற்செய்தி

கிறிஸ்டி அகின்ஸ் பிராவ்னர்

சுவிசேஷரீதியான தொடர்

முன்னோடி சுவிசேஷ ஊழியம் தொடர்

## “இயேசுவின் நற்செய்தியைப்” பயன்படுத்துவது எப்படி?

நீங்கள் வேதாகமக் கதையைச் சொல்லி, வேதாகமச் சத்தியங்களைப் பகிர்ந்துகொள்ளும்போது கீழ்க்கண்ட ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்:

1. எப்போதுமே ஒருவரை மரியாதையோடு நடத்த வேண்டும். கதையைச் சொல்லலாமா என்று அவரிடம் அனுமதி கேட்டபிறகு ஒவ்வொரு வாரமும் தொடர வேண்டும்.

2. அமைதியான, உரையாடுவதுபோன்ற குரலில் பேசுங்கள். தனிப்பட்டவரிடம் பிரசங்கம் செய்யாதிருங்கள்.

3. சத்தியங்களைக்குறித்து விவாதிக்க வேண்டாம். அவிசுவாசிகளின் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் கிரியைசெய்து, பாவத்தை உணர்த்தி, சத்தியத்தைக்குறித்த உறுதியைக் கொடுக்க அனுமதியுங்கள்.

4. அந்த நபர் எதை விசுவாசிக்கிறாரோ அதற்காக அவரை நியாயந்தீர்த்து, குற்றப்படுத் தாதிருங்கள். வேதாகமத்தை ஆய்வுசெய்து, பரிசுத்த ஆவியானவர் வசனத்தின் மூலமாகக் கிரியை செய்ய அனுமதியுங்கள்.

5. ஒவ்வொரு கூட்டத்தையும் தேவன் கதைகளைப் புரிந்துகொள்ள உதவுமாறு கேட்டு ஒரு சிறிய ஜெபத்தோடு துவங்குங்கள்.

6. கதையைச் சொல்ல கீழ்க்கண்ட வழிமுறையைப் பின்பற்றுங்கள்: புத்தகத்திலிருந்து ஒவ்வொரு வாக்கியமாக வாசித்து, வாசித்ததை உங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்குங்கள். இதன் மூலம் அந்த நபர் கதையை இரண்டு முறை கேட்க முடியும், மிகவும் எளிய முறையில் அதன் விளக்கத்தை அறிய முடியும். உங்களிடம் போதுமான பிரதிகள் இருக்குமானால் ஒவ்வொருவரும் வாசித்து, பங்கெடுக்குமாறு செய்யுங்கள்.

7. கதையின் முடிவில் தலைவர் வாய்மொழிக் கேள்விகளைக் கேட்க வேண்டும். மறு ஆய்வு செய்து, கதையைப் புரிந்திருக்கிறார்களா என்று கண்டறிவதே இதன் நோக்கமாகும்- விரிவுபடுத்துவதற்காகவோ அல்லது விவாதத்துக்காகவோ அல்ல!

8. ஆவிக்குரிய சத்தியங்களை வாசியுங்கள். ஒவ்வொரு சத்தியத்தையும் விவாதித்து, கேள்வி கேட்கக் குழு உறுப்பினர்களை அனுமதியுங்கள். எவரோடும் ஒருபோதும் விவாதிக்காதீர்கள். இந்த இடத்தில் உறுப்பினர்கள் ஆவிக்குரிய சத்தியங்களை ஒப்புக்கொள்ளுவதோ அல்லது ஏற்றுக்கொள்ளுவதோ அவசியமில்லை. தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி அவர்கள் சத்தியத்தைப் புரிந்துகொள்ளுவதே முக்கியமாகும்.

9. ஆவிக்குரிய சத்தியங்களுக்குப் பிறகு, உறுப்பினர் ஒவ்வொருவரும் தங்கள் தேவைகளையும் ஜெப விண்ணப்பங்களையும் குழுவோடு பகிர்ந்துகொள்ள அனுமதியுங்கள்.

10. ஒவ்வொரு தேவைக்காகவும்/குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினருக்காகவும் குறிப்பாக ஜெபியுங்கள். குழு வளர்ச்சிபெற்று மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்போது, இந்தப் பரிந்துரை ஜெப வேளையில் உறுப்பினர்கள் ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்க அனுமதியுங்கள்.

11. ஏழாம் பாடத்தின் முடிவில் அவர்கள் இயேசுவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும்படி நீங்கள் அழைக்க வேண்டும். ஆனால் எவரேனும் இந்த ஏழு வாரங்களின் இடைப்பட்ட நேரத்தில் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்க ஆர்வம்காட்டினால், இயேசுவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளுவது எப்படி என்று அவர்களுக்கு எடுத்துக் கூறி, அவர்கள் அதன்படி செய்வதற்கான வாய்ப்பைக் கொடுக்க வேண்டும்.

# இயேசுவின் நற்செய்தி

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "இயேசுவின் பிறப்பு" - பாடம் 1

## மத்தேயு 1-2

**"இவ்விதமாய் உண்டான தலைமுறைகளெல்லாம் ஆபிரகாம்முதல் தாவீது வரைக்கும் பதினாலு தலைமுறைகளும்; தாவீதுமுதல் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலம்வரைக்கும் பதினாலு தலைமுறைகளும்; பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலமுதல் கிறிஸ்து வரைக்கும் பதினாலு தலைமுறைகளுமாம்"** மத்தேயு 1:17.

மரியாள் என்ற யூதப் பெண்மணி மனித உறவில்லாமல், பரிசுத்த ஆவியானவரால் கர்ப்பந் தரித்தாள். அவளுக்கு நியமிக்கப்பட்டிருந்தவன் நீதிமானாக இருந்தபடியால் எல்லோருக்கும் முன்பாக அவளை இழிவுபடுத்த விரும்பவில்லை. இரகசியமாக திருமண ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள விரும்பினான். ஆனால் அவன் இதைச் செய்யத் தீர்மானித்த இரவில், ஒரு கனவில் கர்த்தருடைய தூதன் அவனுக்குக் காட்சியளித்து, "தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே, அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்று கூறினான். பழைய ஏற்பாட்டில் ஏசாயா என்ற தீர்க்கதரிசி "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்" என்று மரியாளைக் குறித்தே சொல்லியிருக்கிறார். இம்மானுவேல் என்றால் "தேவன் நம்மோடிருக்கிறார்" என்று அர்த்தமாகும்.

கனவிலிருந்து விழித்தெழுந்த யோசேப்பு தேவதூதனுக்குக் கீழ்ப்படிந்தான். அவன் மரியாளை மணந்துகொண்டான், ஆனால் அவளுக்குப் பிள்ளை பிறக்கும் வரையில் அவளோடு சேரவில்லை. தூதனால் சொல்லப்பட்டபடியே யோசேப்பு அந்தக் குழந்தைக்கு இயேசு என்று பெயரிட்டான். இயேசு பெத்லகேம் என்ற சிறிய பட்டணத்தில் பிறந்தார். இது இஸ்ரவேல் நாட்டில் யூதேயா பிராந்தியத்தில் இருக்கிறது. அப்போது ஏராது ராஜா யூதேயாவின் ராஜாவாக இருந்தான்.

ஒரு பிரகாசமான நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்து கிழக்கு நாடுகளைச் சேர்ந்த மூன்று சாஸ்திரிகள் யூதேயாவுக்கு வந்தார்கள். யூதேயாவில் ஒரு ராஜா பிறந்திருக்கிறார் என்பதை அந்த நட்சத்திரம் தெரிவிப்பதாக அவர்கள் அறிந்துகொண்டிருந்தார்கள். குழந்தை எங்கே பிறந்திருக்கிறது என்று சரியாகத் தெரியாதபடியால், யூதேயாவின் ராஜாவாகிய ஏரோதுவின் அரண்மனைக்குச் சென்றார்கள். யூதர்களின் புதிய ராஜா எங்கே பிறந்திருக்கிறார் என்று அவனிடம் கேட்டார்கள்.

இந்தச் செய்தி ஏரோதுவைக் கலக்கமடையச் செய்தது. அவன் தனது சமய ஆலோசகர்களையும் ஆசாரியர்களையும் இரகசியமாகக் கூட்டினான். யூதத் தீர்க்கதரிசனத்தின்படி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட யூதர்களின் ராஜா எங்கே பிறப்பார் என்று அவர்களிடம் கேட்டான். வேதவசனங்களின்படி வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட குழந்தை பெத்லகேமில் பிறக்கும் என்று ஆசாரியர்கள் கூறினார்கள். ஏரோது அந்த சாஸ்திரிகளிடம் சென்று அவர்கள் நட்சத்திரத்தை முதலில் எங்கே கண்டார்கள் என்று கேட்டான். இதன்மூலம் அந்தக் குழந்தையின் பிறந்த நாளை அறிந்து, அதன் வயது என்ன என்பதைக் கண்டுபிடிக்கவே அவன் இப்படிக் கேட்டான்.

எந்தப் பட்டணத்தில் குழந்தை பிறக்கும் என்று ஏரோது அவர்களிடம் தெரிவித்தான். பிறகு "நீங்கள் போய், பிள்ளையைக்குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள்; நீங்கள் அதைக் கண்டபின்பு, நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள்" என்று சொல்லி அவர்களை அனுப்பினான்.

சாஸ்திரிகள் அரண்மனையைவிட்டு வெளியே வந்து, அந்த நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்து பெத்லகேமைச் சென்றடைந்தார்கள். அந்த நட்சத்திரம் அவர்களுக்கு முன்பாகச் சென்று,

இயேசு இருந்த வீட்டுக்கு மேலாக நின்றது. அவர்கள் வீட்டுக்குள் நுழைந்தார்கள். குழந்தை இயேசுவையும் அதன் தாயாகிய மரியாளையும் கண்டார்கள். அவர்கள் கீழே விழுந்து அவரைப் பணிந்துகொண்டார்கள். அவருக்குப் பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் காணிக்கையாக வைத்தார்கள்.

சாஸ்திரிகள் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டு, தங்கள் கிழக்கத்திய நாடுகளுக்குத் திரும்பிவிட்டார்கள். ஏனென்றால் அவர்கள் ஏரோதுவிடம் திரும்பிச் சென்று குழந்தையைக் கண்டுபிடித்ததைப்பற்றிச் சொல்ல வேண்டாம் என்று ஒரு கனவில் எச்சரிக்கப்பட்டிருந்தார்கள். எனவே அவர்கள் வேறு வழியில் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

அவர்கள் புறப்பட்டுச் சென்ற பிறகு, யோசேப்புக்கு மற்றொரு கனவு வந்தது. ஏரோது குழந்தையைக் கொன்றுபோட வருவான் என்றும், அதனால் அவர்கள் எகிப்துக்குத் தப்பியோட வேண்டுமென்றும் தேவன் அவர்களை எச்சரித்தார். எனவே அன்றிரவே அவன் தன் குடும்பத்தை அழைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான். ஏரோது மரிக்கும் வரையில் அவர்கள் எகிப்தில் வசித்தார்கள். இது ஓசியா தீர்க்கதரிசியின் மூலமாகக் கூறப்பட்ட "எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி செய்தது.

சாஸ்திரிகள் தன்னை ஏமாற்றிவிட்டார்கள் என்று கண்டவுடன் ஏரோது கடுங்கோபம் கொண்டான். இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்குழந்தைகளும் கொல்லப்பட வேண்டுமென்று அவன் கட்டளையிட்டான். பெத்லகேமிலும் அதைச் சுற்றியுள்ள பட்டணங்களிலும் சிறு குழந்தைகள் பரிதாபமாகக் கொல்லப்பட்டார்கள். இதைக் குறித்து எரேமியா என்ற யூதத் தீர்க்கதரிசி முன்னறிவித்திருந்தார்.

ஏரோது மரித்த பிறகு ஒரு தூதன் யோசேப்பின் கனவில் தோன்றி, இஸ்ரவேலுக்குத் திரும்பிச் செல்லும்படி கட்டளையிட்டான். ஏரோதுவின் குமாரன் யூதேயாவில் ஆளுகைசெய்தபடியால் கவலைப்பட்ட யோசேப்பு குடும்பத்தோடு அருகிலிருந்த கலிலேயா பிராந்தியத்தில் நாசரேத்து என்ற இடத்தில் குடியேறினான். இயேசு தமது சிறுபிள்ளைப் பருவத்தை இந்தப் பட்டணத்தில்தான் கழித்தார். இது " நசரேயன் என்னப்படுவார்" என்ற தீர்க்கதரிசனம் நிறைவேற வழிவகுத்தது.

## நேர்முகக் கேள்விகள்

1. மரியாள் யார்?
2. தேவதூதன் யாருடைய கனவில் தோன்றி, பிள்ளைக்கு எந்தப் பெயரை இடவேண்டுமென்று கூறினான்?
3. சாஸ்திரிகள் ஏன் கிழக்கு நாடுகளிலிருந்து யூதேயாவுக்கு வந்தார்கள்?
4. ஏரோது ஏன் இயேசுவைக் கண்டுபிடிக்க விரும்பினான்?
5. ஏரோதுவிடம் செல்லாமல் வேறு வழியாகத் திரும்ப வேண்டும் என்பதைச் சாஸ்திரிகள் எப்படி அறிந்தார்கள்?
6. யூதர்களின் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ராஜாவை ஏரோது எப்படிக் கொல்ல முயன்றான்?
7. தான் நாட்டைவிட்டு எகிப்துக்கு ஓட வேண்டும் என்பதை யோசேப்பு எப்படி அறிந்தான்?
8. யோசேப்பு திரும்பிச் செல்லுவது இப்போது பாதுகாப்பானது என்பதை எப்படி அறிந்து கொண்டான்?
9. யோசேப்பு ஏன் தனது குடும்பத்தை யூதேயாவுக்கு அழைத்துச் செல்லாமல் அருகிலிருந்த கலிலேயாவுக்கு அழைத்துச் சென்றான்?
10. இயேசு எந்தப் பட்டணத்தில் தமது இளமைப்பருவத்தைக் கழித்தார்?

# ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 1

## மத்தேயு 1-2

1. தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். எப்போதுமே தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார். தேவன் உலகத்துக்கு ஒரு இரட்சகரை அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார். அவர் பல ஆண்டுகளாகப் பலருக்கும் இந்த வாக்குத்தத்தத்தை மறுபடியும் மறுபடியுமாகச் சொல்லிவந்தார். பெரும்பாலும் இந்த வருகை எப்படியிருக்கும் என்பது குறித்த விவரங்களைக் கொடுத்தார். வேதவசனங்கள் முன்னறிவிக்கப்பட்டபடி அப்படியே சரியாக இயேசு வந்தார். இயேசுவின் பிறப்பின் மூலமாக நிறைவேற்றப்பட்ட தீர்க்கதரிசனங்களில் ஒன்றையாவது நாம் இந்தக் கதையில் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

*தேவன் இதே வழியில் நமக்கும் உண்மையுள்ளவராக இருக்கிறார். தேவன் நமக்காக வைத்திருக்கும் திட்டத்தைப்பற்றி வேதாகமத்தில் பல முக்கியமான வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர் இந்த எல்லா வாக்குத்தத்தங்களையும், தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றுவார். நாம் வேதவசனங்களை வாசித்து, நமது வாழ்க்கைக்குரிய தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் கண்டுபிடிப்பது அவசியமாகும்.

2. வேதாகமம் தேவனுடைய வார்த்தையாகும், அதிலுள்ள எல்லாமே உண்மையாகும். இயேசுவின் பிறப்பு மற்றும் வாழ்க்கையைக் குறித்த திட்டவட்டமான விவரங்களை தேவன் தமது தீர்க்கதரிசிகளின் மூலமாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே முன்னறிவித்திருக்கிறார். எல்லாமே தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டபடியே மிகச் சரியாக நடந்தன.

3. தேவன் எல்லாக் காரியங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். அவரால் இயல்புக்கு அப்பாற்பட்ட, அற்புதமான காரியங்களைச் செய்ய முடியும். இந்தக் கதையில் பல இயல்புக்கு அப்பாற்பட்ட காரியங்கள் அல்லது அற்புதங்கள் நடந்திருக்கின்றன. குறைந்தபட்சம் ஒன்றையாவது குறிப்பிடுங்கள்.

4. தேவனால் மனிதரோடு தொடர்புகொள்ள முடியும், அவர் அப்படிச் செய்கிறார். தேவன் இந்த உலகத்தைச் சிருஷ்டித்தாலும், இதில் நடப்பதைக் குறித்து அக்கறைகொள்ளவில்லை என்று சிலர் நம்புகிறார்கள். இந்தக் கதையில் தேவன் எப்படி மனிதர்களோடு தொடர்புகொண்டார்? தேவன் இன்றும் நம்மோடு தொடர்புகொள்ளுகிறார். இந்த ஆய்வின் மூலமாக தேவனோடு எப்படி உறவுகொள்ள முடியும் என்று நாம் கற்றுக்கொள்ளுவோம்.

5. தேவன் நடக்கப்போகும் எல்லாக் காரியங்களையும் அறிந்திருக்கிறார். ஆனால் சில வேளைகளில், தமது தெய்வீக ஞானத்தின்படி, சில பயங்கரமான காரியங்கள் நடக்க அனுமதிக்கிறார். ஏரோது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ராஜாவால் அச்சுறுத்தப்பட்டதுபோல உணர்ந்தபடியால் அவன் இயேசுவைக் கொல்ல விரும்பினான். ஏரோதுவின் இருதயத்திலிருந்த தீமையான பாவத்தைத் தேவன் அறிந்தார். அவன் ஒருபாவமும் அறியாத நூற்றுக்கணக்கான குழந்தைகளைக் கொன்று குவிப்பான் என்று அவர் அறிந்திருந்தார். அவனுடைய இருதயத்திலிருந்த கீழ்ப்படியாமை மற்றும் எதிர்ப்புக் குணத்தின் காரணமாக ஒரு பெரிய பயங்கரம் நடந்தது. இன்று நமது வாழ்க்கையில் கீழ்ப்படியாமை மற்றும் கலகக் குணத்தின் காரணமாகப் பல பயங்கரமான காரியங்கள் நடக்கின்றன. மற்றொருவரின் தீமையினால் ஒருவர் பாதிக்கப்பட்டதற்கு இப்போதைய நாட்களிலிருந்து ஒரு எடுத்துக்காட்டைக் கூற முடியுமா?

6. தேவனுக்கு எதிராக மனிதனால் போரிட்டு, ஜெயிக்க முடியாது. ஏரோதுவினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குழந்தையைக் கொல்ல முடியவில்லை. பல குடும்பங்களில் அதி பயங்கரமான சோகத்தை மட்டுமே அவனால் உண்டாக்க முடிந்தது. இன்று, நாம் பல வேளைகளில் தேவனுடைய பிரமாணங்களையும், சித்தத்தையும் மீற முயலுகிறோம். இது எப்போதுமே

சோகமான விளைவையே கொண்டுவருகிறது. நமக்குச் சோகத்தைக் கொடுக்காவிட்டாலும், நம்மைச் சுற்றியுள்ளவர்களை அது வேதனைப்படுத்துகிறது. உங்கள் சொந்த வாழ்க்கையில் எப்போதாவது தவறான காரியத்தைச் செய்து வாழ்க்கையில் சோகத்தை வரவழைத்துக் கொண்டிருக்கிறீர்களா? மற்றொருவரின் முரட்டாட்டத்தினால் நீங்கள் எப்போதாவது பாதிக்கப் பட்டிருக்கிறீர்களா?

7. ஆசாரியர்களும் சமய ஆலோசகர்களும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ராஜாவைப் பற்றிய வாக்குத்தத்தங்களை அறிந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் இயேசுவைச் சந்திக்கச் செல்லவில்லை. அதிகமாகச் சமயப்பிரகாரமானவர்களாக இருந்தாலும், வேதாகமத்தைப்பற்றி அதிகமாக அறிந்தவர்களாக இருந்தாலும், இயேசுகிறிஸ்துவைப்பற்றி அதிகமாக அறிந்திருந்தாலும், அவரைத் தனிப்பட்ட முறையில் இருதயத்தில் அறியாதவர்களாக இருக்க முடியும்.

8. இயேசு "நம்மோடிருக்கும் தேவனாக" அல்லது "இம்மானுவேலாக" இருக்கிறார். தூதன் இதை யோசேப்புக்கு அறிவித்தான். வேதாகமத்தில் ஏசாயா இதைச் சொல்லியிருக்கிறார். இயேசு ஒரு தீர்க்கதரிசி என்று பலர் சொல்லுகிறார்கள். அவர் ஒரு தேவதூதன் அல்லது நல்ல மனிதன் என்று மற்றவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அவர் "நம்மோடிருக்கும் தேவன்" என்று வேதாகமம் போதிக்கிறது.

அடுத்த ஆறு வாரங்களில் **இயேசு கிறிஸ்து** யார் என்பதுபற்றியும், அவர் பூமிக்குக் கொண்டுவந்த **நற்செய்தி** என்ன என்பதுபற்றியும் பார்க்கப்போகிறோம்.

# இயேசுவின் நற்செய்தி

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "இயேசுவின் ஞானஸ்நானம்"- பாடம் 2

## மத்தேயு 3-4

"மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" மத்தேயு 3:2.

**மறு ஆய்வு**

1. இயேசுவின் தாயின் பெயர் ____________________.
2. இயேசு ____________________ பிறந்தார் என்பது அவருடைய பிறப்பைக் குறித்த அற்புதமாகும்.
3. பழைய ஏற்பாடு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து அதிகமான காரியங்களைக் கூறுகிறது. அதில் ஒன்று அவர் இம்மானுவேல் என்று அழைக்கப்படுவார் என்பதாகும்; அதற்கு "தேவன் ____________________" என்று அர்த்தமாகும்.
4. ஏரோது யூதேயாவின் ____________________. அவன் இயேசுவைக் கொல்ல முயன்றான். பெத்லகேமிலும் அதைச் சுற்றிலும் இருந்த இரண்டு வயதுக்குட்பட்ட சிறுபிள்ளைகள் எல்லோரையும் அவன் ____________________.
5. இயேசுவைக் கண்டுபிடிக்கச் சென்ற சாஸ்திரிகள் ஒரு ____________________ பின்தொடர்ந்தார்கள். அவர்கள் வேறு வழியில் தங்கள் வீட்டுக்குத் திரும்பிச் சென்றார்கள். ஏனென்றால் தேவன் ஒரு ____________________ மூலம் ஏரோது இயேசுவை ____________________ விரும்புகிறான் என்று எச்சரித்திருந்தார்.
6. யோசேப்பு நள்ளிரவில் குடும்பத்தோடு எகிப்துக்குச் சென்றான். ஏனென்றால் ஏரோது ____________________ கொல்ல வகைதேடுகிறான் என்று தேவன் ஒரு ____________________ மூலமாக அவனுக்கு எச்சரித்திருந்தார்.
7. இப்போது இஸ்ரவேலுக்குத் திரும்புவது பாதுகாப்பானது என்று யோசேப்பு ஒரு ____________ மூலமாக அறிந்தான். ஆனால் அவன் பெத்லகேமுக்குச் செல்லாமல் தனது குடும்பத்தோடு ____________________ என்ற பட்டணத்துக்குச் சென்றான்.
8. வரலாறு முழுவதிலும் தாம் செய்ததுபோல இப்போதும் தேவன் தமது ____________________ நிறைவேற்றுவார்.
9. அங்கே அதிகமான தீமை இருந்தாலும் நமது ____________________ என்ன இருக்கிறது என்பதைத் தேவன் அறிவார்.
10. சமயப்பிரகாரமான ஒருவராக இருக்கலாம், வேதாகமத்தைப்பற்றி அதிகமாக அறிந்திருக்கலாம். ஆனாலும் __________________ தனிப்பட்ட முறையில் தன்னுடைய ____________________ அறியாமலிருக்கலாம்.

**யூதேயா பாலைவனத்திலிருந்த ஒரு மனிதனால் மேற்கண்ட வார்த்தைகள் பிரசங்கிக் கப்பட்டன. இந்த மனிதன் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக் கொண்டிருந்தான். வெட்டுக்கிளியையும் காட்டுத்தேனையும் உண்டு அவன் வாழ்ந்தான். யோவான்ஸ்நானன் என்பது அவனுடைய பெயராகும்.**

யோர்தான்நதியைச்சுற்றி வாழ்ந்த மக்கள் அவனுடைய பேச்சைக் கேட்கும்படி பாலைவனத்துக்குச் சென்றார்கள். அவன் பேசியதைக் கேட்ட பிறகு, பலர் தங்கள் பாவங்களைக் குறித்து மனந்திரும்பி, அவனால் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார்கள். சதுசேயர், பரிசேயர் என்று அழைக்கப்பட்ட

சமயத் தலைவர்கள் நடப்பது என்ன என்று காணும்படியாக அங்கே சென்றார்கள். யோவான்ஸ்நானன் அவர்களைப் பார்த்தபோது, "விரியன் பாம்புக் குட்டிகளே" என்று அவர்களை அழைத்தான். தாங்கள் பக்தியுள்ளவர்கள் என்பதாலும், நல்ல பாரம்பரியத்தைக் கொண்டிருப்பதாலும் தங்கள் பாவத்தைவிட்டு மனந்திரும்ப வேண்டியதில்லை என்று நினைத்து, அவர்கள் தேவனுக்குப் பயப்படவில்லை என்று யோவான்ஸ்நானன் கூறினான்.

யோவான்ஸ்நானன் பிரசங்கம் செய்துகொண்டிருந்தபோது, இயேசு வந்து அவனிடம் தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி வேண்டினார். இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கத் தான் தகுதியற்றவன் என்று நினைத்தபடியால் யோவான்ஸ்நானன் முதலில் மறுத்தான். ஆனால் இயேசு வற்புறுத்தினார். இருவரும் யோர்தான் நதிக்குள் இறங்கினார்கள். நதியிலிருந்து கரையேறியபோது, பரிசுத்த ஆவியானவர் ஒரு புறாவைப்போல வானத்திலிருந்து இயேசுவின்மீது இறங்கினார். பரலோகத்திலிருந்து ஒரு உரத்த குரல் "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று கூறியது.

அதன்பிறகு சாத்தானால் சோதிக்கப்படும்படி பரிசுத்த ஆவியானவர் இயேசுவை வனாந்தரத்துக்கு இட்டுச் சென்றார். இயேசு நாற்பது நாட்கள் இரவும் பகலும் உணவுண்ணாமல் தண்ணீர் குடிக்காமல் உபவாசமிருந்தார். நாற்பது நாட்களுக்குப் பிறகு அவருக்குப் பசியுண்டாயிற்று. அந்த வேளையில் சாத்தான் அவரைச் சோதிக்கும்படி வந்தான்.

இயேசு வனாந்தரத்தில் மூன்று முறை சோதிக்கப்பட்டார் என்று வேதாகமம் கூறுகிறது. முதலாவது சோதனையில் இயேசு சில கற்களை அப்பமாக மாற்றுமாறு சாத்தான் அவரைச் சோதித்தான். அவர் தேவன் என்பதை இது நிரூபிக்கும் என்று அவன் கூறினான். தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையைக் கொண்டு இயேசு அவனுக்குப் பதிலளித்தார். இரண்டாவதாக, சாத்தான் அவரை தேவாலயத்தின் கோபுரத்துக்கு இட்டுச்சென்று அங்கிருந்து கீழே குதிக்கும்படிக் கூறினான். இதன்மூலம் அவர் தேவன் என்பதை நிரூபிக்கும்படி சோதித்தான். இயேசு மறுபடியுமாக எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையைக் கொண்டு அவனுக்குப் பதிலளித்தார். இறுதியாக, அவன் இயேசுவை ஒரு மலையுச்சிக்கு அழைத்துச் சென்று சகல நாடுகளையும் காட்டி, "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்" என்று கூறினான். இயேசு "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்று கூறினார். இதோடு சாத்தான் அவரை விட்டுவிட்டுச் சென்றுவிட்டான். தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

வனாந்தரத்திலிருந்து திரும்பிவந்தபோது, யோவான்ஸ்நானன் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறான் என்று இயேசு கேள்விப்பட்டார். அவர் பிறகு யூதேயாவுக்கு வடக்கிலுள்ள கலிலேயா பிராந்தியத்துக்குச்சென்றார். தான்சிறுவயதில்வாழ்ந்தநாசரேத்துபட்டணத்தைவிட்டுகப்பர்நகூமுக்குச் சென்றார். ஏசாயா தீர்க்கதரிசியினால் "கடற்கரையருகிலும் யோர்தானுக்கு அப்புறத்திலுமுள்ள செபுலோன் நாடும் நப்தலி நாடும் ஆகிய புறஜாதியாருடைய கலிலேயாவிலே, இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது" என்று கூறப்பட்டபடியே நடந்தது.

இயேசு இந்தப் பட்டணத்திலிருந்து மக்களுக்குத் தமது பொது ஊழியத்தைத் துவங்கினார் என்று வேதாகமம் கூறுகிறது. "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்பதே அவர் பிரசங்கித்த செய்தியாகும்.

## நேர்முகக் கேள்விகள்

1. யோவான்ஸ்நானன் எப்படியிருந்தான்?
2. யோவான்ஸ்நானன் பிரசங்கித்த செய்தி என்ன?
3. தங்கள் பாவங்களை அறிக்கையிட்டவர்களுக்கு யோவான்ஸ்நானன் என்ன செய்தான்?
4. யோவான்ஸ்நானன் ஏன் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்க விரும்பவில்லை?
5. இயேசுவுக்கு எப்படி ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது?

6. இயேசு தண்ணீரிலிருந்து எழுந்துவந்தபோது என்ன நடந்தது?
7. இயேசு ஏன் வனாந்தரத்துக்குச் சென்றார்?
8. நாற்பது நாட்கள் இரவும் பகலும் இயேசு என்ன செய்தார்?
9. சாத்தான் இயேசுவைச் சோதித்த சோதனைகளில் ஒன்றைக் கூறுக.
10. இந்தச் சோதனைகளுக்குப் பிறகு இயேசுவுக்குப் பணிவிடை செய்யும்படி வந்தது யார்?
11. யோவான்ஸ்நானன் சிறையில் அடைக்கப்பட்டதைப் பற்றிக் கேள்விப்பட்டபோது இயேசு எங்கே சென்றார்?
12. இயேசு பிரசங்கித்த செய்தி என்ன? இந்தச் செய்தியைப் பிரசங்கித்தது வேறொருவர் யார்?

## ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 2

## மத்தேயு 3-4

1. இயேசுவும் யோவான்ஸ்நானனும் பிரசங்கித்த செய்திகள் ஒன்றுபோல இருந்தன: ``மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபத்திருக்கிறது.''

   - மனந்திரும்புதல் என்றால் உங்கள் வாழ்க்கையிலுள்ள பாவத்தைவிட்டுத் திரும்புவதாகும். உங்கள் வாழ்க்கையின் முழுக் கட்டுப்பாட்டையும் இயேசுவுக்கு ஒப்புக்கொடுப்பதாகும்.

   - பாவம் என்பது தேவனுக்கும் அவருடைய பிரமாணங்களுக்கும் கீழ்ப்படியாமல் இருப்பதாகும்.

மனந்திரும்புவது ஒருவருக்குக் கடினமான காரியமா? நீங்கள் இந்த வார்த்தையின் அர்த்தம் என்னவென்று எண்ணுகிறீர்கள்?

*இந்தக் கருத்தைக் குழு உறுப்பினர்களிடையே விவாதியுங்கள். ஒவ்வொருவரும் தங்கள் கருத்தைச் சொல்ல வாய்ப்பளியுங்கள்.*

2. சமயத் தலைவர்கள் தங்களுடைய சமயத்தின் காரணமாகத் தங்களுடைய பாவத்தைவிட்டு மனந்திரும்ப வேண்டிய அவசியமில்லை என்று நினைத்தார்கள். தாங்கள் நல்லவர்கள் என்று அவர்கள் நினைத்தார்கள். யோவான்ஸ்நானன் இவர்களை விரியன்பாம்புக் குட்டிகள் என்று அழைத்தான். தங்கள் பாவத்தைவிட்டு மனந்திரும்ப வேண்டிய அவசியமில்லை என்று கூறுமளவுக்கு இந்த உலகத்தில் பக்தியுள்ளவர்களோ அல்லது நல்லவர்களோ இருக்கிறார்களா?

வேதாகமம் ரோமர் 3:23 வசனத்தில் `` எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களானார்கள்'' என்று சொல்லுகிறது.

தனது வாழ்க்கையில் பாவமேயில்லாத எவரேனும் இந்த உலகத்தில் இருக்கிறார்களா? நடத்தை மற்றும் மனோபாவம் குறித்த தேவனுடைய எதிர்பார்ப்புக்கு எப்போதும் கீழ்ப்படிபவர்களோ அல்லது ஒருபோதும் மீறாதவர்களோ உண்டா? வேதாகமம் ``இல்லை'' என்று சொல்லுகிறது. நம்முடைய எல்லோருடைய வாழ்க்கையிலும் பாவம் இருக்கிறது என்று வேதாகமம் சொல்லுவதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

*இதைக் குறித்த தேவனுடைய வார்த்தைக்குச் சவால்விடுப்பதற்கு ஒவ்வொருவருக்கும் வாய்ப்புக் கொடுப்பது அவசியமாகும். ஒரு தலைவராக, விவாதிக்கவோ அல்லது விவாதிப்பதை அனுமதிக்கவோ செய்யாதீர்கள். மக்கள் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள அனுமதிக்க வேண்டும்.*

3. இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஆனால் அவர் தேவனாக இருக்கிறபடியால் ஒருபோதும் பாவம் செய்யவில்லை.

   இது ஞானஸ்நானம் என்பது ஒருவருடைய வாழ்க்கையிலிருந்து பாவத்தை எடுத்துப்போடும் சமயச் சடங்கு அல்ல என்று கூறுகிறது. ஒரு மனிதனைப் பாவத்திலிருந்து சுத்திகரிப்பதே ஞானஸ்நானத்தின் நோக்கமாக இருக்குமானால், இயேசு தேவனாக இருக்கிறபடியால், அவர் ஒருபோதும் பாவம் செய்யவில்லை என்கிறபடியினால், அவர் ஞானஸ்நானம் பெறுவது அவசியமாக இருந்திருக்காதே?

4. இயேசு தண்ணீரிலிருந்து எழுந்தபோது, பரிசுத்த ஆவியானவர் ஒரு புறாவைப்போல அவர்மீது இறங்கினார். தேவன் பரலோகத்திலிருந்து ``இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்'' என்று கூறினார். இங்கே நாம் திரித்துவத்தின் மூன்று நபர்களையும் பார்க்கிறோம். அவர்கள் யார்?

பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன்.

5. இயேசு சாத்தானால் சோதிக்கப்படும்படி வனாந்தரத்துக்குக் கொண்டுபோகப்பட்டார். சாத்தான் உண்மையில் இருக்கிறான். அவன் இந்தப் பூமியில் ஆவியாக இருக்கிறான். அவனைப் பின்பற்றும் ஆவிகள் பிசாசுகள் என்று அழைக்கப்படுகின்றன. தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகும்படி செய்வதின்மூலம் இவை நமது வாழ்க்கையில் அழிவைக் கொண்டுவருகின்றன. சாத்தான் இயேசுவைச் சோதித்ததுபோல, நம்மையும் சோதிக்கிறான். இதே வேளையில் இயேசுவைப் போலல்லாமல், நமது இருதயத்தில் ஏற்கெனவே இருக்கும் தீமையினால் தேவனுக்குப் பிரியமில்லாத காரியத்தை அல்லது பாவத்தைச் செய்யும்படி நாம் சோதிக்கப்படுகிறோம்.

6. கடற்கரையில் வாழும் மக்களுக்கும், இருளில் இருக்கும் மக்களுக்கும், மரண இருளில் வசிப்பவர்களுக்கும், இயேசு வெளிச்சமாக இருப்பார் என்று ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார்.

கிறிஸ்து இல்லாமல் நாம் எல்லோருமே இருளில் இருக்கிறோம். நீங்களோ அல்லது நீங்கள் அன்புகாட்டும் ஒருவரோ மரண இருளில் வாழ்ந்துகொண்டிருக்கலாம். சிலர் போதை மருந்துக்களின் மூலமாகவும், வேறு சிலர் தவறான உறவுகளின் மூலமாகவும், இன்னும் சிலர் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களாகவும் இந்த நிலையை அடைந்திருக்கிறார்கள். இருளில் இருக்கும் நமக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும்படி இயேசு வந்தார் என்றும், மரண இருளில் வசிப்பவர்களுக்கு அவரால் விடுதலையைக் கொடுக்க முடியும் என்றும் இந்த வசனம் சொல்லுகிறது.

*இன்று நமது ஜெப வேளையில், மரண இருளில் வாழும் அன்புக்குரியவர்களுக்காக ஜெபிப்போம். அவர்கள் இயேசு கிறிஸ்துவில் வெளிச்சத்தையும், விடுதலையையும் கண்டடைவார்களாக!

# இயேசுவின் நற்செய்தி

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "இயேசுவின் அற்புதங்கள்" - பாடம் 3

## மத்தேயு 4-9

**"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" மத்தேயு 4:19.**

**மறு ஆய்வு**

1. இயேசுவின் வருகையைக் குறித்தும், அவருடைய பெயர் "இம்மானுவேல்" அல்லது "தேவன் நம்மோடிருக்கிறார்" என்று யோசேப்புக்குக் கூறியது யார்? இது இயேசு நம்மோடிருக்கும் ____________________ என்று போதிக்கிறது.
2. குழந்தை இயேசுவைக் கொல்ல விரும்பியது யார்? ஏன்? அவர்கள் ____________________ ஓடிச் சென்றபடியால் இயேசு தப்பிப் பிழைத்தார்.
3. இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது யார்? இயேசு ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது என்ற உண்மை ஞானஸ்நானத்தின் செயல்பாடு நமது வாழ்க்கையிலுள்ள ____________________ சுத்திகரிப்பது அல்ல என்று தெரிகிறது.
4. இயேசு தண்ணீரிலிருந்து எழுந்தபோது, புறா வடிவத்தில் அவர்மீது ஒருவர் இறங்கினார், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. புறா வடிவில் வந்தது யார்? வானத்திலிருந்து வந்த சத்தம் யாருடையது?
5. பரிசேயர்கள் தாங்கள் சமய பக்தியுள்ளவர்களாக இருக்கிறபடியால் மனந்திரும்ப வேண்டியதில்லை என்று நினைத்தார்கள். ஒருவர் பாவத்திலிருந்து விடுபடும் அளவுக்குப் பக்தியுள்ளவர்களாக இருக்க முடியுமா?
6. "மனந்திரும்புதல்" என்ற சொல்லுக்கு அர்த்தம் என்ன?
7. பாவம் என்றால் என்ன?
8. வனாந்தரத்தில் இயேசுவைச் சோதித்தது யார்?
9. இயேசு வனாந்தரத்தைவிட்டு வந்த பிறகு எங்கே சென்றார்?

இயேசு கலிலேயாக் கடற்கரையில் சென்றுகொண்டிருந்தபோது, மீன்பிடிக்கும் இருவரைச் சந்தித்தார். அவர் அவர்களை அழைத்து, "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று கூறினார். அவர்கள் உடனடியாகத் தங்கள் வலைகளை விட்டுவிட்டு, அவரைப் பின்தொடர்ந்தார்கள். அந்த நாளில் இயேசு தமது முதல் நான்கு சீஷர்களை அழைத்தார்: பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான். இவர்கள் எல்லோருமே மீனவர்கள்.

பிறகு இயேசு கலிலேயா பிராந்தியம் முழுவதும் சென்று ஜெப ஆலயங்களில் ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். மக்களின் நடுவே காணப்பட்ட எல்லா வகைப்பட்ட நோய்களையும், வியாதிகளையும் குணமாக்கினார். அவர் சென்ற இடங்களிலெல்லாம் திரளான மக்கள் அவரைத் தொடர்ந்தார்கள்.

ஒரு தொழுநோயாளி இயேசுவிடம் வந்து அவரை வணங்கினான். "ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்" என்று அவன் அவரிடம் கூறினான். இயேசு அவனைத் தொட்டு "எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு" என்று கூறினார். உடனடியாக அவன் நோய் நீங்கிக் குணமாகினான்.

ரோமர்களுடைய இராணுவத்தில் தலைவனாக இருந்த ஒருவன் இயேசுவிடம் வந்தான். அவனுடைய வேலைக்காரன் திமிர்வாதத்தினால் அதிகமாக வேதனைப்பட்டுக்கொண்டிருந்தான்.

அவனைக் குணமாக்க இயேசு வல்லவர் என்று அவன் விசுவாசித்தான். அவன் விசுவாசத்தைக் கண்டு இயேசு ஆச்சரியப்பட்டார். அந்த நேரத்திலேயே அந்த வேலைக்காரன் குணமானான்.

மற்றொரு வேளையில், கடலுக்கு அக்கரையில் பிசாசினால் பிடிக்கப்பட்ட இருவரை அவர் சந்தித்தார். இந்த மனிதர்கள் பலமுள்ளவர்களாகவும், கொடூரமானவர்களாகவும் இருந்தபடியால் எவராலும் அவர்களை அடக்க முடியவில்லை, அவர்கள் பக்கத்தில் செல்ல முடியவுமில்லை. அவர்கள் கல்லறைகளின் நடுவே தங்கினார்கள்.

இயேசுவைக் கண்டவுடன் அந்தப் பிசாசுகள் "இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ" என்று சத்தம் போட்டன.

அவர்களுக்கு அருகில் ஒரு பன்றிக் கூட்டம் மேய்ந்துகொண்டிருந்தது. அப்போது பிசாசுகள் அவரிடம் ``நீர் எங்களைத் துரத்துவீரானால், நாங்கள் அந்தப் பன்றிக்கூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடும்" என்று வேண்டிக்கொண்டன. இயேசு "போங்கள்" என்று கூறினார். உடனடியாக அந்த மனிதர்களிடமிருந்து விரட்டப்பட்ட பிசாசுகள் பன்றிகளுக்குள் புகுந்துகொண்டன. பிசாசுபிடித்த பன்றிகள் பைத்தியம் பிடித்தவை போலாகின. பன்றிக்கூட்டமெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து வேகமாக ஓடிக் கடலிலே பாய்ந்து, மாண்டுபோயின.

அந்தப் பன்றிகளுக்குச் சொந்தமானவர்கள் தங்கள் பட்டணத்துக்கு ஓடி, இயேசு செய்ததைச் சொன்னார்கள். பிசாசு பிடித்திருந்த மனிதர்களுக்கு நேரிட்டதையும் சொன்னார்கள். பட்டணத்து மக்கள் இயேசுவிடம் வந்து அந்தப் பகுதியைவிட்டுப் போகும்படிக் கேட்டுக்கொண்டார்கள்.

அவர் படகில் ஏறி, தமது சொந்தப் பட்டணத்துக்குத் திரும்பினார். விரைவிலேயே அவர் மத்தேயு என்ற மனிதனைச் சந்தித்தார். அவன் வரி வசூலிப்பவனாக அரசாங்கத்துக்காக வேலை செய்தான். இயேசு அவனிடம் "என்னைப் பின்பற்றி வா" என்று கூறினார். அவன் உடனடியாக எழுந்து அவரைப் பின்பற்றிச் சென்றான்.

இயேசுவும் அவரைப் பின்பற்றியவர்களும் அன்றிரவு வரி வசூலிப்பவர்களோடும், பட்டணத்தில் மோசமானவர்களோடும் உணவருந்தும்படி சென்றார்கள். சமயத் தலைவர்களாகிய பரிசேயர்கள் இதைக் கண்டபோது, "ஏன் உங்கள் போதகர் ஆயக்காரர்களோடும் பாவிகளோடும் உணவருந்துகிறார்?" என்று கேட்டார்கள்.

இயேசு இதைக் கேட்டபோது, பரிசேயர்களிடம் திரும்பி "நோயாளிகளுக்கு மருத்துவன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து என்னவென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்று கூறினார்.

## நேர்முகக் கேள்விகள்

1. இயேசுவின் முதல் சீஷர்கள் செய்த தொழில் என்ன?
2. தம்மைப் பின்பற்றும்படி இயேசு கூறியபோது அவர்கள் என்ன செய்தார்கள்?
3. இயேசு கலிலேயாவின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்றார், திரளான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள். தம்மை நோக்கிக் கவனத்தைத் திருப்பும்படி அவர் செய்தது என்ன?
4. மத்தேயுவின் சுவிசேஷத்தில் முதன் முதலாகக் குறிப்பிடப்பட்டுள்ள அற்புதம் என்ன?
5. ரோம அதிகாரியின் வேலைக்காரனின் பிரச்சினை என்ன?
6. பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள் எங்கே தங்கினார்கள்? அவர்கள் எப்படிப்பட்ட மனிதர்களாக இருந்தார்கள்?
7. இயேசுவைக் கண்டவுடன் பிசாசுகள் என்ன செய்தன?
8. மனிதர்களை விட்டு வெளியேறியவுடன் அந்தப் பிசாசுகளுக்கு நேரிட்டது என்ன?
9. பிசாசுகளுக்கு என்ன நேரிட்டது?

10. பன்றிகளுக்குச் சொந்தமானவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள்?
11. மத்தேயு எப்படிப்பட்ட மனிதனாக இருந்தார்?
12. இயேசு எப்படிப்பட்ட மனிதர்களோடு உணவருந்தினார்?
13. பரிசேயர்கள் இதைக் குறித்து என்ன நினைத்தார்கள்?
14. இயேசு பரிசேயர்களுக்கு எப்படிப்பட்ட பதிலைக் கொடுத்தார்?

## ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 3
## மத்தேயு 4-9

1. இயேசு மக்களுக்கிடையே எந்த வேறுபாட்டையும் காட்டவில்லை.

    - இயேசுவின் முதல் சீஷர்கள் மீனவர்கள். அவர்கள் கல்வியறிவில்லாத எளிய மனிதர்களாக இருந்தார்கள்.
    - தொழுநோயாளி அவனுடைய நோயின் காரணமாகச் சமுதாயத்தைவிட்டு விலக்கப் பட்டவனாக இருந்தான். அவனுடைய உறுப்புக்களில் ஏற்பட்ட சிதைவுகளின் காரணமாக அவனை வெறுத்தார்கள்.
    - ரோமப் போர்வீரனின் வேலைக்காரன் திமிர்வாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்தான். அவனுக்குப் பணமோ, சமுதாயத்தில் பதவியோ கிடையாது.
    - மத்தேயு வரிவசூலிப்பவர். அவர் பணக்காரராக இருந்திருக்கலாம். ஆனால் ஊழல் செய்த கள்ளனாக இருந்தார்.
    - பிசாசினால் பிடிக்கப்பட்ட மனிதர்களின் பட்டணத்தார் அவர்களை அதிகமாக வெறுத்தார்கள். இவர்கள் குணமடைந்தார்கள் என்பதைவிடப் பன்றிகளை இழந்ததே அவர்களுக்குப் பெரிய காரியமாக இருந்தது.

**ஆனால் இந்த யாவரும் இயேசுவுக்கு முக்கியமானவர்களாகவும், மதிப்புள்ளவர்களாகவும் இருந்தார்கள். நீங்கள் தேவனுடைய பார்வையில் மதிப்புள்ள ஒருவராக இருக்கிறீர்கள். உங்களுடைய கடந்த காலம், உங்கள் தோற்றம் அல்லது சமுதாயத்தில் உங்கள் அந்தஸ்து ஆகியவை எல்லாம் தேவனுக்கு முக்கியமானதல்ல.**

2. இயேசுவிடம் நமது நோய்களைக் குணமாக்கும் வல்லமை இருக்கிறது. மக்கள் குணமாக்கப்பட்ட நிகழ்வுகளில் நாம் பார்க்கும் எடுத்துக்காட்டுகள் யாவை?

3. ஒவ்வொரு ஆவி அல்லது பிசாசின்மீதும் இயேசுவுக்கு அதிகாரம் இருக்கிறது. சிலர் நன்மையான காரியங்களைச் செய்ய முயலும்போது பிசாசுகள் அல்லது ஆவிகளோடு இடைபட வேண்டியிருக்கிறது. ஆனால் தங்களுக்கு என்ன நேரிட்டிருக்கிறது என்று அவர்கள் அறிவதற்கு முன்பாகவே இந்தப் பிசாசுகள் அவர்களுடைய வாழ்க்கையை ஆட்கொள்ளுகின்றன. இந்தப் பிசாசுகள் அவர்களை விடாமல் துன்புறுத்திக்கொண்டிருக்கின்றன. இந்த மக்களுக்குத் தங்களுடைய வாழ்க்கையிலிருந்து பிசாசுகளை விரட்டும் வல்லமை இல்லை. **இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு ஆவி மற்றும் பிசாசின்மீதும் இயேசுவுக்கு அதிகாரம் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே நாம் தீய ஆவிகளிலிருந்து விடுதலைபெற முடியும்.**

4. இயேசு கண்ணியமற்ற மக்களிடத்திலும்கூட அன்புகாட்டுகிறார். அவர் எல்லாப் பாவிகளையும் ஏற்றுக்கொள்ளுகிறார். இயேசு மக்களைக் கண்டனம் செய்வதில்லை. ஆனால் ஒவ்வொருவரையும் மனந்திரும்புதலுக்குள்ளும், மெய்யான மன்னிப்புக்குள்ளும் கொண்டுவர வேண்டும் என்பது அவருடைய விருப்பமாகும்.

5. பரிசேயர்கள் அல்லது சமயப்பிரகாரமான மக்கள் தங்கள் பாவத்தைவிட்டு மனந்திரும்பவில்லை. இயேசுவோடுகூட உணவருந்திய பாவிகளைவிட இவர்கள் தங்களை மேலானவர்களாக நினைத்தார்கள். மன்னிக்கப்பட்ட ஒரு பெரிய பாவியாக இருப்பதோ அல்லது குறைந்த பாவங்களோடு மனந்திரும்பாமல் இருப்பதோ, எது மேலானது?

    - **மன்னிக்கப்பட்ட ஒரு பெரிய பாவியாக இருப்பதே மேலானது.**

நாம் இருக்கிறவண்ணமாகவே இயேசு நம்மை ஏற்றுக்கொண்டு, நம்மிடத்தில் அன்புகாட்டுகிறார். நாம் பயங்கரமான பாவிகளாக இருந்தாலும், ஏழைகளாக இருந்தாலும், கல்வியறிவு இல்லாவிட்டாலும், நமக்கு அதிகமான பிரச்சினைகள் இருந்தாலும், நாம் சரீரப்பிரகாரமாக நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதைக்குறித்து அவர் கவலைப்படுவதில்லை. அவருடைய பார்வையில் நாம் எல்லோரும் ஒன்றுபோலவே இருக்கிறோம். மனந்திரும்பி, அவரைப் பின்பற்றுவதே நமக்கு முக்கியமான காரியமாகும்.

# இயேசுவின் நற்செய்தி

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "இயேசுவின் போதனைகள்" - பாடம் 4
## மத்தேயு 10-16

"**பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்**" மத்தேயு 12:7.

**மறு ஆய்வு**

1. இயேசு ____________________ என்ற யூதப் பெண்மணியினிடத்தில் பிறந்தார்.
2. கிழக்கு நாடுகளிலிருந்து வந்த சாஸ்திரிகள் ஒரு ____________________ பின்பற்றியபடியால் அவர்களால் இயேசுவைக் கண்டுபிடிக்க முடிந்தது.
3. சாஸ்திரிகள் ஏரோதுவின் அரண்மனைக்குத் திரும்பவில்லை. ஏனென்றால் வேறு வழியில் வீட்டுக்குத் திரும்பும்படி தேவன் ஒரு ____________________ அவர்களை எச்சரித்திருந்தார்.
4. யோவான்ஸ்நானன் வனாந்தரத்தில் வாழ்ந்து பிரசங்கம் செய்தான். தங்கள் பாவங்களை அறிக்கையிட்ட மக்களுக்கு அவன் ____________________ கொடுத்தான்.
5. "மனந்திரும்புதல்" என்ற சொல்லுக்கு அர்த்தம் என்ன? ________________________________
6. இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, ____________________ அவர்மீது புறா வடிவில் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தம் பேசியது. இது தேவனுடைய மூன்று ஆள்தத்துவங்களை நமக்குக் காட்டுகிறது: __________________ தேவன், __________________ தேவன், ____________________ தேவன். இதை நாம் திரித்துவம் என்று அழைக்கிறோம்.
7. வனாந்தரத்தில் இயேசு ____________________ சோதிக்கப்பட்டார்.
8. இயேசு முதலாக அழைத்த சீஷர்கள் ____________________ தொழிலைச் செய்துவந்தார்கள்.
9. பிசாசினால் பிடிக்கப்பட்ட இரண்டு மனிதர்களை இயேசு எதிர்கொண்டார். இயேசு இந்த மனிதர்களுக்கு எப்படி உதவினார்? இயேசுவின் செயலுக்குப் பதிலாகப் பட்டணத்துக்கு மக்கள் செய்தது என்ன?
10. இயேசு எப்படிப்பட்ட மக்களோடு உணவருந்துகிறார் என்று பரிசேயர்கள் குறை கூறினார்கள்?
11. மன்னிக்கப்பட்ட ஒரு பெரிய பாவியாக இருப்பதோ அல்லது குறைந்த பாவங்களோடு மனந்திரும்பாமல் இருப்பதோ, எது மேலானது?

இயேசு பன்னிருவரைத் தமக்குச் சீஷர்களாக இருக்கும்படி அழைத்தார். அதாவது, அவர்கள் அவருக்கு நெருக்கமாக இருந்து, அவரால் பயிற்சி பெறுவார்கள். இயேசு இந்தப் பன்னிருவருக்கும் அசுத்த ஆவிகளுக்கு மேலான அதிகாரத்தையும், எல்லா வகைப்பட்ட நோய்களையும் குணமாக்கும் வல்லமையையும் கொடுத்தார். அவர்கள் இலவசமாகப் பெற்றபடியால், இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று அவர் அவர்களிடம் கூறினார். இப்படி அனுப்பப்பட்டவர்களில் யூதாஸ்காரியோத்தும் ஒருவனாக இருந்தான்.

யூத மக்கள் மனந்திரும்பும்படியும், இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைக்கும்படியும் அழைப்பதற்காக இயேசு அவர்களை இஸ்ரவேல் நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் அனுப்பினார். இயேசு இவர்களுக்கு ஒரு செய்தியைக் கொடுத்தார்: "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்."

இயேசுதாமே கலிலேயா முழுவதும் சுற்றித்திரிந்து, போதித்து, பிரசங்கம் செய்து, எல்லா நோய்களையும்குணமாக்கினார். ஆனால்அவர்யாரோடுஅதிகமானநேரத்தைச்செலவழித்திருந்தாரோ அந்தக் கலிலேய மக்கள் அவரைப் புறக்கணித்தார்கள். இதைக் கண்டவுடன் இயேசு தமது பிதாவோடு பேசும்படி சென்றார். இது அவருடைய வார்த்தைகளாகும்:

> "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்வி மான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என்பிதாவினால்எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதாதவிர வேறொருவனும்குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது."

இவைகளைக் கூறிய பிறகு இயேசு நமது சீஷர்களோடு ஒரு கோதுமை வயலைக் கடந்து சென்றார். அது ஓய்வுநாளாக இருந்தது. சீஷர்கள் பசியோடு இருந்தபடியால், தானியங்களைக் கொய்து, தின்றார்கள்.

சமயத் தலைவர்களாகிய பரிசேயர்கள் இதைக் கண்டார்கள். ஓய்வுநாளில் வேலைசெய்வது யூதர்களின் பிரமாணத்துக்கு விரோதமாக இருந்தபடியால், அவர்கள் சீஷர்களைக் குறை கூறினார்கள். அவர்கள் இன்னும் தேவனுடைய பிரமாணங்களைப் புரிந்துகொள்ளவில்லை என்று இயேசு பதிலளித்தார். ஏனெனில் "நான் பலியை அல்ல, இரக்கத்தை விரும்புகிறேன்" என்று வேதவசனத்தை அவர்கள் உணரவில்லை.

கோதுமை வயல்களைக் கடந்து, இயேசுவும் சீஷர்களும் ஒரு யூத ஜெபஆலயத்துக்குச் சென்றார்கள். அங்கே சூம்பின கையையுடைய ஒரு மனிதனைச் சந்தித்தார்கள். இயேசு அந்த மனிதனிடம் அவனுடைய கையை நீட்டும்படிக் கூறினார். ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலுள்ள எல்லோரும் பார்க்கும்போது அவர் அவனைக் குணமாக்கினார்.

கடும்கோபம்கொண்ட பரிசேயர்கள் அந்த இடத்தைவிட்டு வெளியே சென்று, ஒரு சங்கத்தைக் கூட்டி, இயேசுவைக் கொன்றுபோடும்படி திட்டமிட்டார்கள். அவர்கள் திட்டமிடுவதை அறிந்த இயேசு அந்த இடத்தைவிட்டு அகன்றுபோனார். ஆனால் திரளான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள். அவர்களெல்லாரையும் அவர் குணமாக்கி, தம்மைப்பற்றிச் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

இயேசு தொடர்ந்து மக்களுக்குப் பிரசங்கம்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அந்தப் பகுதியில் தமது ஊழியத்தைத் தொடர்ந்தார். இரண்டு முறை மக்கள் அவரைப் பின்தொடர்ந்து வனாந்தரத்துக்குச் சென்று,நீண்டநேரம்சாப்பிடாமல்அவருடையபிரசங்கத்துக்குச்செவிகொடுத்துக்கொண்டிருந்தார்கள். இருமுறை இயேசு ஏழுக்கும் குறைவான அப்பங்களையும், ஒருசில மீன்களையும் கொண்டு நான்காயிரம் பேருக்கும் அதிகமானவர்களுக்கு உணவளித்தார்.

கலிலேயாவில் ஊழியம் செய்துவந்தபோது, இயேசு தமது சீஷர்களிடம் தாம் விரைவில் எருசலேமுக்குச் செல்லப் போவதாகவும், அங்கே பயங்கரமான காரியங்கள் நடக்கப்போகிறது என்றும் தெளிவாகக் கூறினார். யூதத் தலைவர்களின் கைகளில் தாம் அதிகமாகப் பாடுபட வேண்டியிருக்கும் என்றும், அவர்கள் தம்மைக் கொன்றுபோடுவார்கள் என்றும், ஆனால் மூன்று நாட்கள் கழித்துத் தாம் உயிரோடு எழப்போவதாகவும் அவர் முன்னறிவித்தார்.

## நேர்முகக் கேள்விகள்

1. இயேசு தமது சீஷர்களுக்குச் செய்யும்படி கொடுத்த பொறுப்பு என்ன?
2. மனிதர்களுக்கு முன்பாகத் தம்மை அறிக்கையிடுபவர்களுக்குத் தாம் என்ன செய்வதாக இயேசு கூறினார்? மனிதர்களுக்கு முன்பாகத் தம்மை மறுதலிப்பவர்களுக்குத் தாம் என்ன செய்வதாக இயேசு கூறினார்?
3. கப்பர்நகூமில் கூடியிருந்தவர்களும், இயேசு பல அற்புதங்களைச் செய்த கலிலேயாவின் பிற பட்டணங்களில் இருந்தவர்களும் இயேசுவின் செய்தியை எப்படி எடுத்துக்கொண்டார்கள்?
4. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்கள் தம்மிடத்தில் வரும்படி இயேசு அழைத்தார். இந்த மக்களுக்கு என்ன செய்வதாக அவர் வாக்குத்தத்தம் செய்தார்?
5. இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஏன் கோதுமை வயலில் நின்றார்கள்?
6. கோதுமையைப் பறித்ததற்காகப் பரிசேயர்கள் ஏன் இயேசுவைக் குற்றம்சாட்டினார்கள்?
7. பரிசேயர்கள் ஏன் இயேசு சூம்பின கையையுடையவனைக் குணமாக்கியதை எதிர்த்தார்கள்?
8. யூதத் தலைவர்களால் நியமிக்கப்பட்ட சங்கத்தின் நோக்கம் என்ன?
9. இயேசு தமது சீஷர்களிடம் தமக்குச் சில காரியங்கள் நடக்கப்போவதாகக் கூறினார். இயேசு கூறிய தீர்க்கதரிசனம் என்ன?

## ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 4

## மத்தேயு 10 - 16

1. மனிதருக்கு முன்பாக இயேசுவின் நாமத்தை அறிக்கையிடுகிறவர்களை அவர் தமது பிதாவுக்கு முன்பாக அறிக்கையிடுவார். ஆனால் அவரை மறுதலிப்பவர்களை அவர் பரம பிதாவுக்கு முன்பாக மறுதலிப்பார்.

2. இயேசுவிடமிருந்து சில அற்புதங்களைப் பெறுவதற்காகவே பலர் அவரைப் பின்தொடர்ந்தார்கள். அவர்கள் அவரோடு உறவுகொள்ள விரும்பவுமில்லை, அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய விரும்பவுமில்லை. தங்கள் பாவத்தைவிட்டு மனந்திரும்ப அவர்கள் விரும்பவில்லை. தேவனுடைய இரக்கத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள மட்டுமே அவர்கள் விரும்பினர்கள். இன்றும் அநேக மக்கள் இப்படி இருக்கிறார்கள் அல்லவா? அவர்களில் யாரையாவது உங்களுக்குத் தெரியுமா?

3. இயேசு கிறிஸ்துவும் அவரால் பிதாவினிடத்தில் வந்தவர்களும் மட்டுமே பிதாவை அணுக முடியும். இயேசு கிறிஸ்துவேயல்லாமல் தேவனோடு மத்தியஸ்தம் செய்பவர் வேறு எவரும் கிடையாது. ஒரே தேவன் இருக்கிறார், அவரைச் சென்றடைய ஒரே வழி மட்டுமே உண்டு. இயேசு கிறிஸ்துவே அந்த வழி என்று வேதாகமம் போதிக்கிறது.

*இயேசு கிறிஸ்துவையல்லாமல் வேறு மத்தியஸ்தர்களின் மூலமாக ஜெபிக்கும்படி உங்களுக்கு ஒருவேளை போதிக்கப்பட்டிருக்கலாம். இந்த மத்தியஸ்தர்கள் யார்? கடவுள்களா, தீர்க்கதரிசிகளா, கடந்த காலத்தின் நல்ல மக்களா? அவர்கள் நல்ல மக்களாக இருந்தாலும் அவர்கள் தேவன் அல்ல என்று வேதாகமம் சொல்லுகிறது. தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரே மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே இருக்கிறார் என்று வேதாகமம் சொல்லுவதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

4. இயேசு நமது பாரங்களையும் கவலைகளையும் தாமே தாங்கிக்கொள்ள விரும்புகிறார். அவர் சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவராக இருக்கிறார். நாம் சுமக்கும் பாரத்தை அகற்ற அவர் விரும்புகிறார். நாம் அவருடைய நுகத்தை ஏற்றுக்கொள்ளுவோமானால் அவரில் நமது ஆத்துமாக்கள் இளைப்பாறுதலைக் கண்டடைய முடியும். அதாவது, நாம் நமது வாழ்க்கையில் அவருடைய ஆளுகையை அல்லது தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

5. இயேசு நமது சரீரப்பிரகாரமான தேவைகளைக் குறித்து அக்கறை கொண்டிருக்கிறார். சீஷர்கள் பசியோடு இருந்தபோது, இயேசு அவர்களுக்கு உணவளித்தார். இது பரிசேயர்களின் கோபத்தையும் துன்புறுத்தலையும் தூண்டிவிடும் என்று அறிந்தபிறகும் அவர் இப்படிச் செய்தார். பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்த தேவன் நம் ஒவ்வொருவருடைய தேவைகளைக் குறித்தும் அக்கறை கொண்டிருக்கிறார்.

``நான் பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்.'' ``பலி'' என்ற சொல் உங்களுக்கு எப்படி அர்த்தப்படுகிறது? தயவைப் பெறும்படியாகவோ அல்லது பாவங்கள் மன்னிக்கப் படும்படியாகவோ தேவனுக்குப் பலியிட வேண்டுமென்று சமயத் தலைவர்கள் உங்களுக்குப் போதித்திருக்கிறார்களா? பலிகளின்மூலம் நீங்கள் எதையும் நிரூபிக்க முயலுவதைத் தேவன் விரும்புவதில்லை என்பதை விசுவாசிப்பது உங்களுக்குக் கடினமாக இருக்கிறதா? இப்போது இரண்டாவது முறையாகத் தேவன் மனிதருடைய பலிகளை விரும்புகிறதில்லை என்று இயேசு பரிசேயர்களுக்குப் போதிக்கிறார். ஆனால் அதிகமாகச் சமயப்பிரகாரமான மக்களாக இருப்பவர்களுக்கு இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளுவது பெரும்பாலும் கடினமாக இருக்கிறது. தேவனுடைய கோபாக்கினையைத் தவிர்ப்பதற்கும் அவருடைய தயவைப் பெறுவதற்கும் நாம்

எதையாவது செய்ய வேண்டுமென்று மற்றச் சமயங்கள் போதிக்கின்றன. தேவன் கொடுத்துள்ள வாக்குத்தத்தங்களுக்காகவும், கடந்த காலப் பாவங்களுக்காகவும் அல்லது வெறுமனே தேவனுக்குத் தங்கள் பற்றுறுதியைக் காட்டுவதற்காகவும் பலர் பல கடினங்களைச் சகித்துக்கொள்ளுவதின்மூலம் அவருக்குத் திரும்பிச் செலுத்த முயலுகிறார்கள். ஆனால் இது தேவனுக்கு ஒன்றையும் நிரூபிப்பதில்லை. அவர் நம்மோடு உறவுகொள்ள விரும்புகிறார். அவர் நமக்கு இரக்கம்காட்ட விரும்புகிறார்; நமது பலிகளை அவர் விரும்பவில்லை. தாம் அதிகமாகப் பாடுபட்டு மரிக்க வேண்டியிருக்கும் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆனால் மூன்று நாட்களுக்குப் பிறகு அவர் உயிரோடு எழுந்துவருவார். இதெல்லாம் தேவனுடைய திட்டத்தின் பகுதியாக இருக்கிறது. அவர் இதைத் தமது சீஷர்களுக்கு விளக்கிக்கூற முயன்றார். ஆனால் அவர் ஏன் மரித்து, பிறகு உயிரோடு எழ வேண்டும் என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

*இந்த ஆய்வின் கடைசி மூன்று பாடங்களில், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தைக் குறித்துப் புரிந்துகொள்ள முயலுவோம். இந்தத் தனிச்சிறப்பான நிகழ்வு உலக வரலாற்றை நித்தியமாக மாற்றியிருக்கிறது. இந்த ஒரே நிகழ்வு நமது வாழ்க்கையிலுள்ள பாவத்தின் கட்டை உடைத்து, நமது வாழ்க்கையை மாற்றக்கூடிய வல்லமையுள்ளது.

# இயேசுவின் நற்செய்தி

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "இயேசு காட்டிக்கொடுக்கப்படுதல்" - பாடம் 5

## மத்தேயு 20 - 26

"இயேசுஎருசலேமுக்குப்போகும்போது,வழியிலேபன்னிரண்டுசீஷரையும்தனியேஅழைத்து:இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரைப் பரியாசம்பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்" மத்தேயு 20:17-19.

**மறு ஆய்வு**

1. இயேசு ____________________ என்ற கன்னிகையினிடத்தில் பிறந்தார்.
2. ஏராது ராஜா இயேசுவைக் ____________________ விரும்பியபடியால், எகிப்துக்குச் செல்ல வேண்டுமென்று அவருடைய தகப்பனாராகிய ____________________ ஒரு கனவில் எச்சரிக்கப்பட்டார்.
3. யோவான்ஸ்நானன் வனாந்தரத்தில் வாழ்ந்து, பிரசங்கித்துக்கொண்டிருந்தான். தங்கள் பாவத்தைவிட்டு ____________________ எல்லோருக்கும் அவன் ஞானஸ்நானம் கொடுத்தான்.
4. இயேசுவிடம் ____________________ எதுவுமில்லை, என்றாலும் தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி யோவான்ஸ்நானனிடம் கேட்டுக்கொண்டார்.
5. "மனந்திரும்புதல்" என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?
6. இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, __________ ___________ ஒரு புறாவைப்போல அவர்மீது இறங்கினார். "இவர் என்னுடைய ____________________, இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று வானத்திலிருந்து தேவனுடைய சத்தம் உண்டாகியது.
7. வனாந்தரத்தில் இயேசு ____________________ சோதிக்கப்பட்டார்.
8. ____________________ பிடிக்கப்பட்டிருந்த இருவரை இயேசு எதிர்கொண்டார். பிசாசுகளை ____________________ அதிகாரம் தமக்குண்டு என்று இயேசு காட்டினார்.
9. மன்னிக்கப்பட்ட ஒரு பெரிய பாவியாக இருப்பதோ அல்லது குறைந்த பாவங்களோடு மனந்திரும்பாமல் இருப்பதோ, எது மேலானது?
10. நீங்கள் மனிதருக்கு முன்னால் அவரை அறிக்கையிட்டால் அவர் பரலோகத்தில் தமது ____________________ முன்பாக உங்களை ____________________ என்று இயேசு கூறினார்.
11. கப்பர்நகூம் பட்டணத்து மக்கள் உட்படப் பல கலிலேயர் தேவனுடைய வார்த்தையைக் ____________________ ; இயேசு செய்த பல அற்புதங்களின் காரணமாகவே அவர்கள் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.
12. அவர்கள் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்ப விரும்பவில்லை. மறுபடியுமாக "மனந்திரும்புதல்" என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?
13. வருத்தப்பட்டுப் பாரம் சுமப்பவர்களுக்கு தாம் ____________________ கொடுப்பதாக இயேசு கூறினார். ஏனென்றால் அவருடைய நுகம் ____________________ .
14. அது ____________________ நாளாக இருந்தபடியால், இயேசு சூம்பிய கையையுடைய மனிதனைக் குணமாக்குவதைப் பரிசேயர் விரும்பவில்லை. ____________________ வேலை செய்வது பிரமாணத்துக்குப் புறம்பானது.

15. இயேசுவை ____________________ பரிசேயர் திட்டம் தீட்டினார்கள்.

16. தம்மைக் கொல்லும்படி பரிசேயர் திட்டமிடுகிறார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். என்றாலும் அவர் தொடர்ந்து பல அற்புதங்களைச் செய்தார். அவர் இரண்டு ____________________ சில ____________________ கொண்டு நான்காயிரத்துக்கும் அதிகமான மக்களுக்கு உணவளித்தார்.

இயேசு தமது சீஷர்களோடு கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் பயணமாகச் சென்றார். இயேசு எருசலேமை நெருங்கியபோது, ஒரு குறிப்பிட்ட கிராமத்துக்குச் சென்று தனக்குத் தேவையான ஒரு கழுதையையும், அதன் குட்டியையும் அவிழ்த்துவருமாறு தமது சீஷர்களில் இருவருக்குக் கட்டளையிட்டார். இயேசு கழுதைக்குட்டியின்மீது ஏறி எருசலேமுக்குள் நுழைந்தார்.

அவர் மகிமையோடும் வெற்றியோடும் உள்ளே நுழைந்தார். தெருவின் இரு பக்கத்திலும் திரளான மக்கள் கூடினார்கள். இயேசு ஒரு கம்பளத்தின்மீது சென்று பட்டணத்துக்குள் நுழைவதுபோலப் பலரும் தங்கள் ஆடைகளைப் பாதையில் விரித்தார்கள். சிலர் மரக்கிளைகளைத் தறித்து, அவரை மகிமைப்படுத்தும்படியாகத் தரையில் பரப்பினார்கள். சிலர் குருத்தோலைகளைப் பிடித்தபடி அவருக்கு முன்பாக நடந்துபோய், "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா" என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.

இந்த மேன்மையான மற்றும் அசாதாரணமான நிகழ்ச்சியைக் கண்டு எருசலேம் பட்டணத்தார் அனைவரும் அசைக்கப்பட்டார்கள். பட்டணத்திலுள்ள எல்லோரும் "யார் இவர்?" என்று கேட்டார்கள். பலரும் "இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு" என்று பதிலளித்தார்கள்.

பட்டணத்துக்குள் நுழைந்த இயேசு யூதர்களுடைய ஆலயத்துக்குச் சென்றார். அங்கே விற்பனை செய்த வியாபாரிகள் எல்லோரையும் வெளியே விரட்டினார். காசுக்காரர்களுடைய பலகைகளைக் கவிழ்த்துப்போட்டார். அவர் அவர்களிடம் "என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" என்று சொல்லிக் கடிந்துகொண்டார். இதற்குப் பிறகு அவர் ஆலயத்தில் பார்வையற்றவர்களையும், உடல் ஊனமுற்றவர்களையும் குணமாக்கினார்.

இயேசு மக்களுக்குப் பல காரியங்களையும் போதித்த பிறகு, ஆலயத்தில் பல அற்புத அடையாளங்களைச் செய்தார். அவரை எப்படிக் கொல்லுவது என்று திட்டமிடும்படி பிரதான ஆசாரியர்களும், சமயத் தலைவர்களும் ஒன்றாகக் கூடினார்கள். ஏதாவது தந்திரம் செய்து அவரைக் கொல்ல வேண்டுமென்று அவர்கள் விவாதித்தார்கள். ஆனால் பஸ்கா பண்டிகையின்போது தங்கள் திட்டத்தை நிறைவேற்றுவதைக் குறித்து அவர்கள் கவலைப்பட்டார்கள். இயேசுவோடு இடைபடுவதற்குப் பஸ்கா வரையில் காத்திருக்கும்படி அவர்கள் தீர்மானித்தார்கள்.

பன்னிரு சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து பிரதான ஆசாரியர்களிடம் சென்று ``நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்?" என்று கேட்டான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்கச் சம்மதித்தார்கள். அந்த நாளிலிருந்து யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுக்கச் சரியான வேளைக்காகக் காத்திருந்தான்.

அது பஸ்கா பண்டிகையின் வாரமாக இருந்தபடியால், சீஷர்கள் இயேசு கூறியபடியே இரவு உணவை ஆயத்தம்செய்தார்கள். கொண்டாட்டத்தின் இரவன்று இயேசு பன்னிருவரோடு கூட அமர்ந்தார். உணவருந்தும்போது அவர் "உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார். உடனே சீஷர்கள் வருத்தப்பட்டு, "ஆண்டவரே, நானோ, நானோ?" என்று கேட்கத் துவங்கினார்கள்.

இயேசு "என்னோடேகூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான். மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" என்று பதிலளித்தார்.

அவரைக் காட்டிக்கொடுக்கவிருந்த யூதாசும் அவரிடம் "ரபீ, நானோ?" என்று கேட்டான். இயேசு "நீ சொன்னபடிதான்" என்று பதிலளித்தார்.

அன்றிரவு அவர்கள் ஒன்றாக இரவு உணவைச் சாப்பிட்டார்கள். அந்த வேளையில் இயேசு அப்பத்தை எடுத்து, அதை ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களிடம் கொடுத்து "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்று கூறினார். பிறகு அவர் பாத்திரத்தை எடுத்து, நன்றி கூறி, அவர்களிடம் கொடுத்து "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று கூறினார்.

அவர் உணவருந்தி முடித்த பிறகு ஒரு பாமாலைப் பாடலைப் பாடினார்கள். பிறகு ஒலிவ மலை என்ற மலைக்கு ஒன்றாகச் சென்றார்கள். அங்கே அவர் அவர்களுக்குப் பல காரியங்களைக் குறித்துப் போதித்தார். அவைகளில் சில நடக்கவிருக்கும் காரியங்களைப் பற்றியதாகும்.

பிறகு அவர் அவர்களைக் கெத்செமனே என்ற தோட்டத்துக்கு அவரோடுகூட இரவு முழுவதும் ஜெபிக்கும்படி அழைத்துச்சென்றார். இயேசுதம்மோடுகூட பேதுரு, யாக்கோபு, யோவான் மூவரையும் அழைத்துக்கொண்டு முன்னால் சென்றார். அங்கே அவர் துயரப்படவும், வியாகுலப்படவும் துவங்கினார். தம்மோடுகூட இருக்கும்படி அவர் அவர்களிடம் கேட்டுக்கொண்டார். பிறகு சற்று முன்னால் சென்று தமது பிதாவோடு தனிமையில் ஜெபித்தார். வரவிருக்கும் காரியங்களைக் குறித்து அவர் ஜெபித்தார். அவர் இப்படி ஜெபித்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது:

> என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்;
> ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது

அவர் இதே ஜெபத்தை மூன்று முறை ஜெபித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய இருதயம் மரணத்துக்கேதுவான துக்கத்தைக் கொண்டிருந்தது.

ஆனால் சீஷர்களால் ஒரு மணி நேரம்கூட விழித்திருக்க முடியவில்லை. அவர்கள் எல்லோரும் உறங்கிவிட்டார்கள். இறுதியாக இயேசு அவர்களை எழுப்பி "என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம்" என்று அழைத்தார்.

## நேர்முகக் கேள்விகள்

1. இயேசு எந்த மிருகத்தின்மீது ஏறி எருசலேமுக்குள் நுழைந்தார்?
2. இயேசு பட்டணத்துக்குள் நுழைந்தபோது மக்கள் அவரை எப்படி நடத்தினார்கள்?
3. இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூதாஸ் என்ன செய்தான்?
4. பட்டணத்தில் எந்தப் பண்டிகை கொண்டாடப்பட்டது?
5. அவன் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்று இயேசு எப்படி யூதாசை எச்சரித்தார்?
6. இரவு உணவின்போது திராட்சரசத்தைக் குறித்து இயேசு என்ன கூறினார்?
7. இயேசுவைப் பொருத்தவரையில் ஏன் இரத்தம் சிந்துதல் அவசியமாக இருந்தது?
8. இரவு முழுவதையும் ஜெபத்தில் கழிக்கும்படி இயேசு தமது சீஷர்களை கெத்செமனேக்கு அழைத்துச் சென்றார். எத்தனை சீஷர்களால் இரவு முழுவதும் ஜெபிக்க முடிந்தது?
9. தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இரவில் இயேசு ஜெபித்த ஜெபம் என்ன?

# ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 5
## மத்தேயு 20-26

1. தேவன் எல்லாவற்றையும் தமது கட்டுப்பாட்டின்கீழாக வைத்திருக்கிறார். இயேசு திடுக்கிடும் படியாக அவரைப் பிடிக்கும்படி பரிசேயர்கள் சதித்திட்டம் தீட்டினார்கள். ஆனால் தேவன் எப்போதுமே பூமியில் தமது பரிபூரண சித்தத்தைச் செயல்படுத்தும்படி அவர்களைப் பயன்படுத்திக்கொண்டிருந்தார். இயேசு சிலுவையில் மரிக்க வேண்டும் என்பது எப்போதுமே தேவனுடைய சித்தமாக இருந்தது.

2. மற்றவர்கள் அதை அறியாவிட்டாலும், நமது இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதைத் தேவன் அறிவார். தமது சீஷனாகிய யூதாஸ் தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பதை இயேசு எப்போதுமே அறிந்திருந்தார்.

3. இயேசு நம்மை நேசிக்கிறார், நாம் அவரைப் புறக்கணித்தாலும் அதே அன்போடு நம்மை நடத்துகிறார். யூதாஸ்தான் காட்டிக்கொடுக்கப் போகிறவன் என்பதை மற்றச் சீஷர்களால் நம்ப முடியவில்லை. ஏனென்றால் அவர் யூதாசை அவ்வளவு நன்றாக நடத்தினார். இதுபோல, நாம் பல வேளைகளிலும் இயேசுவையும், நமது வாழ்க்கைக்கான அவருடைய சித்தத்தையும் புறக்கணித்தாலும், அவர் நம்மை நேசித்து, நம்மை அன்போடு நடத்துகிறார்.

4. நமது பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக இயேசுவின் இரத்தம் நமக்காகச் சிந்தப்பட்டது. இயேசு ஏன் மரிக்க வேண்டும் என்பதை அந்த வேளையில் சீஷர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. தங்கள் வாழ்க்கையில் செய்த பாவங்களுக்காகத் தேவன் ஒருவருடமிருந்தும் அதற்கான கிரயத்தை எதிர்பார்க்கிறார், இரத்தம் சிந்தப்படுவதே இந்தக் கிரயம் என்பதைச் சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை. இயேசு தங்களிடத்தில் அன்புகாட்டுகிறார், தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படிருக்கின்றன என்பதை அவர்கள் புரிந்துகொண்டிருந்தார்கள். ஆனால் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக இயேசு என்ன கிரயம் கொடுக்க வேண்டியிருந்தது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள இன்னும் கொஞ்சக் காலம் தேவைப்பட்டது.

*பலர் தங்கள் வாழ்க்கையில் பாவம் இருக்கிறது என்பதை அறிந்திருக்கிறார்கள். சிலர் இயேசுவைப் பற்றியும், அவர் தங்களிடத்தில் அன்புகாட்டுகிறார் என்பதைப்பற்றியும் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் ஒருசிலர் மட்டுமே தேவன் பாவத்துக்கான தண்டனையாக இரத்தத்தை எதிர்பார்க்கிறார் என்பதைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். இயேசு தேவனாக இருக்கிறபடியால், அவர் மட்டுமே இந்த உலகத்தில் பாவமில்லாமல் வாழ்ந்திருக்கிறார். அவர் நம்மீது அளவுகடந்த அன்பு கொண்டிருக்கிறபடியால், நமது பாவங்களுக்கான மற்றும் உலகத்தாரின் பாவங்களுக்கான தண்டனையைச் செலுத்தும்படி அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுப்பதைத் தெரிந்துகொண்டார். இந்தப் பலியின் காரணமாகவே நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவனோடு சமாதானமடைவதற்கான வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது.

அடுத்த வாரம், இயேசு சிலுவையில் அறையப்பட்டது குறித்த விவரங்களை நாம் பார்ப்போம்.

# இயேசுவின் நற்செய்தி

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "இயேசு சிலுவையில் அறையப்படுதல்" - பாடம் 6
## மத்தேயு 26-27

"அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்; அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" மத்தேயு 26:64.

### மறு ஆய்வு

1. இயேசு ஒரு கன்னிகையினிடத்தில் பிறந்தார்; அவளுடைய பெயர் ____________________.
2. வேதவசனங்கள் முன்னறிவித்தபடியே இயேசு ____________________ என்ற பட்டணத்தில் பிறந்தார்.
3. இயேசு ஏரோது ராஜாவைவிட்டு ஓடியபடியால் அவர் ____________________ நாட்டிலிருந்து வந்ததாக வேதவசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.
4. ஏரோது ராஜா மரித்துவிட்டபடியால் இஸ்ரவேலுக்குத் திரும்பும்படி இயேசுவின் தகப்பனாகிய ____________________ சொல்லப்பட்டது. யோசேப்பு ஏரோதுவின் குமாரனைக் குறித்துப் பயப்பட்டபடியால், அவன் ____________________ பிராந்தியத்திலுள்ள நாசேரத்து என்ற பட்டணத்தில் குடியேறினான்.
5. இயேசு ____________________ ஞானஸ்நானம் பெற்றுத் தமது பொது ஊழியத்தைத் துவங்கினார்.
6. இயேசு தண்ணீரிலிருந்து எழுந்தபோது, ________________ ________________ புறாவைப் போல வானத்திலிருந்து அவர்மீது இறங்கினார். "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்ற ____________________ சத்தம் வானத்திலிருந்து கேட்டது.
7. இயேசு பலருடைய நோய்களைக் குணமாக்கி, பல மக்களுடைய ____________________ மன்னித்தார்.
8. பல அற்புதங்களைச் செய்த பின்னரும், கலிலேயா பிராந்தியத்தைச் சேர்ந்த மக்கள் இயேசுவின் செய்தியை ____________________ பிறகும், தங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்ப விரும்பவில்லை.
9. "மனந்திரும்புதல்" என்ற சொல்லுக்கு அர்த்தம் என்ன?
10. இயேசு எருசலேம் பட்டணத்துக்குள் நுழைந்தபோது, திரளான மக்கள் ஊர்வலமாக அவரோடு வந்தார்கள். அந்த ஊர்வலத்தில் இயேசு ____________________ மீது ஏறியவராக வந்தார்.
11. பஸ்கா பண்டிகையின் இரவு வேளையில், இயேசு தமது சீஷர்களிடம் அவர்களில் ஒருவன் தம்மை ____________________ போவதாகக் கூறினார். அந்த வேளையில் யார் அவன் என்பதைச் சீஷர்கள் அறிந்திருக்கவில்லை.
12. அவர்கள் அருந்திய திராட்சரசத்தைக் குறித்து இயேசு பேசினார். அது அவர்களுடைய பாவங்களின் ____________________ சிந்தப்படுகிற தம்முடைய இரத்தம் என்று அவர் கூறினார்.
13. சீஷர்கள் இதைக் கேட்டாலும், இயேசு தங்கள் பாவங்களுக்காக ____________________ போகிறார் என்பதைப் புரிந்துகொள்ளவில்லை.
14. இரவு உணவை உண்ட பிறகு அவர்கள் எல்லோரும் ஒலிவ மலைக்கும், பிறகு கெத்செமனேக்கும் சென்றார்கள். இயேசு இரவில் ஜெபித்தபோது, சீஷர்கள் ____________________ .

15. “இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, ____________________ சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்று இயேசு ஜெபித்தார்.

இயேசு தமது சீஷர்களை எழுப்பிக்கொண்டிருந்த வேளையில், இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் பிரதான ஆசாரியர்கள், சமயத் தலைவர்கள் உட்பட, திரளான மக்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு அங்கே வந்தார்கள். யூதாஸ் இயேசுவிடம் வந்து அவரை முத்தமிட்டு, “ரபீ, வாழ்க” என்று கூறினான். இயேசு அவனிடம் “சிநேகிதனே, எதற்காக வந்திருக்கிறாய்?” என்று கேட்டார்.

சட்டென்று இயேசுவின் சீஷர்களில் ஒருவன் ஒரு வாளை உருவி, பிரதான ஆசாரியனின் சேவகனின் காதை வெட்டினான். இயேசு அந்தச் சீஷனைத் தடுத்து, காயப்பட்டவனைக் குணமாக்கினார். தாம் விரும்பினால் தமக்காகப் போரிடப் பிதா பன்னிரண்டு லேகியோனுக்கும் அதிகான தூதர்களை அனுப்புவார் என்றும், இவையெல்லாம் வேதவசனங்கள் நிறைவேறும்படியாகத் தேவனுடைய சித்தத்தின்படி நடக்கின்றன என்று இயேசு அவனிடம் கூறினார்.

பிறகு இயேசு தம்மிடம் வந்த திரளான மக்களை நோக்கி “கள்ளனைப் பிடிக்கப்புறப்படுகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்கவந்தீர்கள்; நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது, நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே. ஆகிலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது” என்று கூறினார்.

இயேசுவின் சீஷர்கள் அவரைத் தனியே விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள்.

அவரைப் பிடித்தவர்கள் அந்த நாட்களில் பிரதான ஆசாரியனாக இருந்த காய்பா என்பவனுடைய வீட்டுக்கு அவரைக் கொண்டுசென்றார்கள். அந்த வீட்டில் அவரைக் கேள்வி கேட்கும்படி ஆசாரியர்களும், சமயத் தலைவர்களும் கூடியிருந்தார்கள்.

அவருக்கு மரண தண்டனை விதிக்கும்படியாக அவருக்கு விரோதமாக அவர்கள் சில பொய்ச்சாட்சிகளை ஏற்பாடு செய்திருந்தார்கள். பலர் முன்னால் வந்தாலும் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும் அளவுக்கு எதையும் அவருக்கு விரோதமாகக் குற்றம்சாட்ட முடியவில்லை. அப்போது அவரிடம் கேள்விகேட்கும்படி பிரதான ஆசாரியன் முன்னால் வந்தான். “நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்” என்று அவன் கேட்டான்.

இயேசு அவனிடம் “நீர் சொன்னபடிதான்” என்று பதிலளித்தார். மேலும் அவர் தொடர்ந்து, “அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று கூறினார்.

இந்தப் பதிலைக் கேட்டவுடன், பிரதான ஆசாரியன் தனது ஆடைகளைக் கிழித்துக்கொண்டு “தேவதூஷணம்” என்று கத்தினான். கூடியிருந்த மக்கள் இயேசுவிடம் வந்து அவருடைய முகத்தில் காறி உமிழ்ந்தார்கள். சிலர் அவரை அடித்தார்கள். வேறுசிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: “கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும்” என்று அவரிடம் கேட்டார்கள்.

விடியற்காலமானபோது, ஆசாரியர்களும் சமயத் தலைவர்களும் இயேசுவை அந்தப் பிராந்தியத்தின் ரோம அதிபதியாக இருந்த பொந்தியு பிலாத்துவிடம் இழுத்துச் சென்றார்கள். தாம் யூதருடைய ராஜா என்று இயேசு உரிமைகொண்டாடியதாக அவர்கள் குற்றம்சாட்டினார்கள்.

பிலாத்து அவரிடம் “நீர் யூதருடைய ராஜாவா?” என்று கேட்டான். இயேசு “நீர் சொன்னபடிதான்” என்று பதிலளித்தார்.

பிலாத்து இயேசுவை விசாரித்த பிறகும், அவரைச் சிலுவையில் அறையும்படியான எந்தக் குற்றத்தையும் அவரில் கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும், முந்தைய இரவு மோசமான கனவைக் கண்டிருந்த அவனுடைய மனைவி அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று எச்சரிக்கைச் செய்தியை அனுப்பினாள். பொறாமையின் காரணமாகவே யூதத் தலைவர்கள் இயேசுவைப் பிடித்து அனுப்பியிருக்கிறார்கள் என்று பிலாத்து அறிந்திருந்தான். ஆனால் ஏவிவிடப்பட்ட மக்களுக்கு எப்படிப் பதிலளிப்பது என்று திகைத்தான்.

ஒவ்வொரு ஆண்டும் பஸ்கா பண்டிகையின்போது மக்கள் விரும்பிய ஒரு கைதியை விடுதலை செய்வது பிலாத்தின் பழக்கமாக இருந்தது. இந்த ஆண்டு பரபாஸ் என்ற மிக மோசமான குற்றவாளி சிறையில் இருந்தான். பிலாத்து மக்களிடம் ``எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்கவேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசு வையோ?'' என்று கேட்டான். பரிசேயர்களில் தூண்டிவிடப்பட்ட மக்களோ பரபாசை விடுதலைபண்ண வேண்டுமென்று கத்தினார்கள்.

''அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்னசெய்யவேண்டும்'' என்று பிலாத்து கேட்டான். மக்கள் ''அவனைச் சிலுவையில் அறையும்'' என்று கூக்குரலிட்டார்கள்.

மக்கள் கலகம் செய்யப்போகிறார்கள் என்பதை உணர்ந்த பிலாத்து, ஒரு கோப்பையில் தண்ணீரைக் கொண்டுவரச் செய்து, அதை அள்ளித் தன் கைகளைக் கழுவி, ''இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று அவன் கூறினான். அவன் பரபாசை மக்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவைச் சாட்டையினால் அடிக்கும்படி செய்தான்.

பிலாத்துவின் வீரர்கள் இயேசுவைப் பிலாத்துவின் அரண்மனைகக்குக் கொண்டுபோய், அவரைத் துன்புறுத்தி, கேலிசெய்தார்கள். அவரைச் சுற்றிலும் சேர்ந்து நின்று, அவருடைய ஆடைகளைக் களைந்து, சிவப்பு நிறமான அங்கியை அவருக்கு உடுத்தினார்கள். பிறகு முட்களால் ஒரு கிரீடத்தைச் செய்து அவருடைய தலையில் சூட்டினார்கள். செங்கோலுக்குப் பதிலாக ஒரு கோலை அவர் கையில் கொடுத்தார்கள். அவருக்கு முன்னால் பணிந்துகொண்டு, ''யூதருடைய ராஜாவே வாழ்க'' என்று அவரைக் கேலிசெய்தார்கள். அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைத் தலையில் அடித்தார்கள். அவரைக் கேலிசெய்து முடித்த பிறகு, அவருடைய ஆடைகளை அவருக்கு அணிவித்தார்கள். ''கபாலஸ்தலம்'' என்று அர்த்தப்படும் கொல்கொதா என்ற இடத்துக்கு அவரைச் சிலுவையில் அறையும்படி இழுத்துச் சென்றார்கள்.

இயேசு அங்கே சிலுவையில் அறையப்பட்டார். சிலுவையில் அவருடைய தலைக்கு மேலாக ''இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு'' என்று எழுதி வைத்தார்கள். இயேசு இரண்டு கள்ளர்களுக்கு நடுவில் சிலுவையில் அறையப்பட்டார்.

இயேசு சிலுவையில் தொங்கியபோது, ஆறாம் மணி நேரம் முதல் ஒன்பதாம் மணி நேரம் வகையில் எங்கும் காரிருள் சூழ்ந்தது. ஒன்பதாம் மணி வேளையில் இயேசு ``ஏலி! ஏலி! லாமா சபக்தானி'' என்று சத்தமிட்டார். அதற்கு ''என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்று அர்த்தமாம். சிறிது நேரம் கழித்து அவர் உரத்த சத்தமிட்டார், தமது ஆவியை ஒப்புக்கொடுத்தார்.

அவர் தமது ஆவியை ஒப்புக்கொடுத்த நேரத்தில், உடனடியாகப் பல பயங்கரமான காரியங்கள் நடந்தன. ஆலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது, மரித்துப்போயிருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. இயேசு உயிர்த்தெழுந்த பிறகு இவர்கள் கல்லறையிலிருந்து புறப்பட்டு எருசலேமுக்குள் சென்று பலருக்கும் காணப்பட்டார்கள்.

## நேர்முகக் கேள்விகள்

1. இயேசு எவ்வாறு காட்டிக்கொடுக்கப்பட்டார்?
2. இயேசுவைப் பாதுகாக்கும்படியாக அவருடைய சீஷர்களில் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்தான். அது என்ன? இயேசு கூறிய பதில் என்ன?

3. அவர் காட்டிக்கொடுக்கப்பட்டபோது, அவருடைய சீஷர்கள் என்ன செய்தார்கள்?
4. அந்த மனிதர்கள் இயேசுவைத் தோட்டத்திலிருந்து எங்கே இழுத்துச் சென்றார்கள்?
5. பல பொய்ச்சாட்சிகள் சொல்லப்பட்டாலும், இறுதியில் அவர்கள் எப்படி அவர் தேவதூஷணம் செய்தார் என்று இயேசுவைக் குற்றஞ்சாட்டினார்கள்?
6. காலை விடிந்தவுடன் சமயத் தலைவர்கள் இயேசுவை எங்கே இழுத்துச் சென்றார்கள்?
7. விசாரணைக்குப் பிறகு பிலாத்துவால் இயேசுவிடம் எந்தக் குற்றத்தையும் கண்டிபிடிக்க முடியவில்லை. ஆனால் மக்களுக்குப் பயப்பட்ட அவன் அவர்கள் இரண்டிலொன்றைத் தெரிந்துகொள்ளும்படி கூறினான். அவன் மக்களிடம் கூறியது என்ன? அவர்கள் எதைத் தெரிந்துகொண்டார்கள்?
8. போர்வீரர்கள் இயேசுவை எப்படி நடத்தினார்கள்?
9. மூன்று மணி நேர இருளுக்குப் பிறகு இயேசு தேவனை நோக்கிக் கூக்குரலிட்டார். அவர் கூறிய வார்த்தைகளின் மொழிபெயர்ப்பு என்ன?
10. இயேசு தமது ஆவியை ஒப்புக்கொடுத்தபோது, நடந்த சில காரியங்கள் யாவை?

## ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 6

## மத்தேயு 26-27

1. இயேசு யார்? "மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார், வானத்தின் மேகங்கள் மேல் வருவார்." இது இயேசு பிரதான ஆசாரியனுக்குக் கொடுத்த பதிலாகும். இந்தப் பதிலே இறுதியில் அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு வழிநடத்தியது. இந்தப் பதிலை அந்த மக்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனும் இதே கேள்வியைக் குறித்துப் போராட வேண்டியிருக்கிறது. மெய்யாகவே இயேசு யார்? இயேசு மெய்யாகவே சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருந்து, மேகங்கள் மேல் வருவார் என்றால், அவருக்குச் செவிசாய்ப்பது எப்படி என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.

2. ஒரு வெறுக்கப்பட்ட குற்றவாளியாகிய பரபாசின் இடத்தில் இயேசு சிலுவையில் அறையப்பட்டார். பரபாஸ் விடுவிக்கப்பட்டான்.

*ஒருவேளை நான் பரபாசைப்போலப் பயங்கரமான குற்றவாளியாக இராவிட்டாலும், நான் பாவியாக இருக்கிறேன். தேவனுக்கு முன்பாக மரண தண்டனையையே பெற்றிருக்கிறேன். ரோமர் 6:23 வசனத்தில் வேதாகமம் ``பாவத்தின் சம்பளம் மரணம்'' என்று கூறுகிறது. அதாவது, நமது வாழ்க்கையில் நாம் செய்த எல்லா மோசமான காரியங்களுக்காகவும் நாம் கொல்லப்படத் தகுதியானவர்களாக இருக்கிறோம் என்பது இதன் அர்த்தமாகும். நாம் பரபாசைப்போல அதிகமான பாவங்களைச் செய்திருந்தாலும், அவருடைய சில சீஷர்களைப்போல நல்லவர்களாக இருந்தாலும், அதில் ஒரு காரியமுமில்லை.

3. நமது பாவங்களுக்காக இயேசு துன்புறுத்தப்பட்டு, நியாயந்தீர்க்கப்பட்டு, கொல்லப்பட்டார். இதுவே இயேசு இந்த உலகத்துக்கு வந்ததின் காரணமாகும். நாம் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டுமென்று அவர் விரும்பினார். சிலர் இயேசு ஒரு இரத்தச்சாட்சி என்றும் தீர்க்கதரிசி என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் இயேசுவின் சொந்த அறிக்கையின்படி இது சரியானதல்ல. அவர் தேவனாக இருக்கிறார், நமது பாவங்களுக்காக மரிக்கும்படியாகவே அவர் இந்த உலகத்துக்கு வந்தார்.

4. இயேசு தமது ஆவியை ஒப்புக்கொடுத்தார். எந்தவொரு கணத்திலும் இயேசுவால் சிலுவையிலிருந்து கீழே இறங்கிவந்திருக்க முடியும். அவர் ஒரே வார்த்தையில் தம்மைக் கேலிசெய்த எல்லோரையும் கொன்றுபோட்டிருக்க முடியும். ஆனால் அவராகவே தெரிந்துகொண்டு, இழிவுகளைச் சகித்துக்கொண்டு, நியமிக்கப்பட்ட வேளை வரையில் சிலுவையில் தொங்கினார். பிறகு தம்முடைய வேளையின்படி தமது ஆவியை ஒப்புக்கொடுத்தார். நமது பாவங்களுக்கான தண்டனையைச் செலுத்தும்படியாகவே அவர் மரிப்பதைத் தெரிந்துகொண்டார். வேதாகமம் யோவான் 3:16 வசனத்தில் ``தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'' என்று கூறுகிறது.

*அடுத்த பாடத்தில், இயேசுவின் உயிர்த்தெழுதலைப்பற்றி நாம் படிப்போம். இயேசு மரிக்கவில்லை, இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார், இன்று உங்களுடைய வாழ்க்கைக்குள் வர விரும்புகிறார் என்பதே சத்தியமாகும். உங்கள் இருதயத்தைப் பாவங்களில்லாமல் சுத்திகரித்து, உங்களுடைய வாழ்க்கையை முழுமையாக மாற்ற அவர் விரும்புகிறார்.

# இயேசுவின் நற்செய்தி

கிறிஸ்டி ஏ. பிராவ்னர்

## "இயேசுவின் உயிர்த்தெழுதல்" - பாடம் 7

## மத்தேயு 27-28

"நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்" மத்தேயு 28:5-6.

**மறு ஆய்வு**

1. இயேசு ____________________ என்ற பெயருடைய ஒரு கன்னிகையினிடத்தில் பிறந்தார்.
2. யோவான்ஸ்நானன் ____________________ கொடுத்த பிறகு இயேசு தமது பொது ஊழியத்தைத் துவங்கினார்.
3. அவருடைய ஞானஸ்நானத்தின்போது __________ ___________ புறாவைப்போல அவர்மீது இறங்கினார். வானத்திலிருந்து "இவர் என்னுடைய நேச ____________________, இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்ற தேவனுடைய சத்தம் கேட்டது. இது திரித்துவத்தின் மூன்று நபர்களையும் காட்டுகிறது: __________________ தேவன், __________________ தேவன், ____________________ தேவன்.
4. இயேசு பல மக்களுடைய நோய்களைக் குணமாக்கினார், பலருக்கு அவர்களுடைய ____________________ மன்னித்தார்.
5. ஆனால் அவர் பல அற்புதங்களைச் செய்தபோதிலும், கலிலேயாவில் வசித்த பல மக்கள் அவருடைய வார்த்தைகளைப் புறக்கணித்தார்கள். அவர்கள் தங்கள் பாவங்களைவிட்டு ____________________ விரும்பவில்லை.
6. "மனந்திரும்புதல்" என்ற சொல்லின் அர்த்தம் என்ன?
7. இயேசு திராட்சரசத்தைக் குறித்து "இது பாவ ____________________ அநேகருக்காகச் ____________________ என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று கூறினார்.
8. இயேசு ஜெபித்த தோட்டத்தில் பரிசேயர்கள் அவரைப் பிடித்தார்கள். காய்பா என்ற பெயரையுடைய பிரதான ____________________ வீட்டுக்கு அவரை இழுத்துச் சென்றார்கள்.
9. பிரதான ஆசாரியன் இயேசுவிடம் அவர் ____________________ என்று கேட்டான். அவர் அப்படித்தான் என்று பதிலளித்தார். அப்போது மக்கள் முன்னால் வந்து அவருடைய முகத்தில் ____________________. அவரை ____________________, அவர் கன்னத்தில் ____________________.
10. அதிகாலையில் பரிசேயர்கள் இயேசுவை ____________________ என்ற பெயரையுடைய ரோம அதிபதியிடம் இழுத்துச் சென்றார்கள்.
11. பிலாத்து இயேசுவிடம் எந்தக் குற்றத்தையும் காணவில்லை. ஆனால் மக்கள் நடுவே ____________________ உண்டாகும் என்று பயப்பட்டபடியால், அவர் சிலுவையில் அறையப் படும்படி ஒப்புக்கொடுத்தான்.
12. ரோமப்போர்வீரர்கள்இயேசுவைத்துன்புறுத்தினார்கள்.அவர்தலையின்மீது__________________ சூடினார்கள். அவர் கையில் பிடிக்கும்படி கொடுத்த ____________________ அவர் தலையில் அடித்தார்கள்.
13. சிலுவையில் இயேசு தொங்கியபோது, அவருடைய தலைக்கு மேலாக "இவன் யூதருடைய ____________________ இயேசு" என்று எழுதப்பட்ட பலகை வைக்கப்பட்டது.
14. ஆறாம் மணி முதல் ஒன்பதாம் மணி வரையில் பூமியில் ____________________ பரவியது.

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு என்பவன் செல்வந்தனாக இருந்தான். அவன் இயேசுவின் சீஷனாகவும் இருந்தான். அவன் இயேசுவின் சரீரத்தைத் தன்னுடைய சொந்தக் கல்லறையில் அடக்கம்பண்ணுவதற்காகப் பிலாத்துவிடம் அனுமதி கேட்டான். பிலாத்துவின் அனுமதியைப் பெற்றவுடன் அவரை ஒரு புதிய கல்லறையில் அடக்கம்செய்தான். ஒரு குகைக்குள் இயேசுவின் சரீரத்தை வைத்த பிறகு கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல் புரட்டி வைக்கப்பட்டது.

அடுத்த நாள், இயேசு தாம் மூன்றாவது நாளில் உயிரோடு எழுவதாகச் சொல்லியிருந்த வார்த்தைகளை நினைவுகூர்ந்த பரிசேயர்கள் ஒன்றாகக் கூடி, பிலாத்துவிடம் சென்றார்கள். அந்தச் சரீரத்தை எவரும் எடுத்துக்கொண்டு போய்விடாதபடி கல்லறைக்குக் காவல் போட வேண்டுமென்று அவனிடம் கேட்டுக்கொண்டார்கள். எனவே அவர்களே கல்லறையைப் பாதுகாக்கும்படி பிலாத்து அனுமதி கொடுத்தான். அவர்கள் அந்த இடத்துக்குச் சென்று, காவல்காரர்களைக் காவல் வைத்து, கல்லறையை மூடிய கல்லுக்கு முத்திரை போட்டார்கள்.

வாரத்தின் முதலாம் நாளில் மகதலேனா மரியாளும், மற்றொரு மரியாளும் இயேசு வைக்கப்பட்டிருந்த கல்லறைக்குச் சென்றார்கள். அவர்கள் அங்கே சென்றபோது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். கல்லறையைக் காவல் காத்துக்கொண்டிருந்த காவலர்கள் பயத்தினால் செத்தவர்கள்போல விழுந்துகிடந்தார்கள்.

ஆனால் அந்தத் தூதன் அந்தப் பெண்களிடம் ''நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்குமுன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன்'' என்று கூறினான்.

பயத்தோடும், அதிகமான சந்தோஷத்தோடும் அந்தப் பெண்கள் கல்லறையைவிட்டுச் சீஷர்களிடம் ஓடிச்சென்றார்கள். ஆனால் வழியில் இயேசு அவர்களுக்கு எதிர்ப்பட்டு ``வாழ்க'' என்று கூறினார். அவர்கள் அவருடைய காலில் விழுந்து, அவரைப் பணிந்துகொண்டார்கள். கலிலேயாவில் தம்மைச் சந்திக்கும்படி சீஷர்களிடம் சொல்ல வேண்டுமென்று அவர் அவர்களிடம் கூறினார்.

கல்லறையைக் காவல் காத்துக்கொண்டிருந்த காவலர்கள் பட்டணத்துக்குள் நுழைந்து, என்ன நடந்தது என்பதைப் பிரதான ஆசாரியர்களிடம் அறிவித்தார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் கூடி ஆலோசித்தார்கள். அவர்கள் காவலர்களிடம் அதிகமான பணத்தைக் கொடுத்து, நாங்கள் உறங்கிக்கொண்டிருந்தபோது, அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லுங்கள் என்று சொல்லி அனுப்பிவைத்தார்கள். பிலாத்துவுக்கு இந்தச் செய்தி எட்டினால், அவர்களுக்கு எந்த ஆபத்தும் வராதபடி தாங்கள் பார்த்துக்கொள்ளுவதாகவும் கூறினார்கள். எனவே காவலர்கள் அந்த இலஞ்சத்தை வாங்கிக்கொண்டு, பல புரளிகளைப் பரப்பினார்கள், இவை பட்டணத்தில் பல ஆண்டுகளாகப் பேசப்பட்டன.

எஞ்சியிருந்த பதினொரு சீஷர்களும் கலிலேயாவில் இயேசு தங்களைச் சந்திப்பதாகச் சொல்லியிருந்த மலைக்குச் சென்றார்கள். அவரைக் கண்டபோது, அவரைப் பணிந்துகொண்டார்கள், சிலர் சந்தேகப்பட்டார்கள்.

இயேசு அவர்களிடம் கடைசியாகப் பேசியபோது ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்'' என்று கூறினார். ஆமென்.

## நேர்முகக் கேள்விகள்

1. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு பிலாத்துவிடம் வேண்டிக்கொண்டது என்ன?
2. மூன்றாம் நாளில் இயேசுவின் சரீரத்துக்கு ஏதோ நேரிடும் என்று பரிசேயர்கள் பயப்பட்டார்கள். ஏன்?
3. வாரத்தின் முதலாம் நாளில் இயேசுவைக் காணச் சென்றது யார்? கல்லறையிடம் வந்தபோது அவர்கள் கண்டது என்ன?
4. தாங்கள் கண்டதைச் சீஷர்களிடம் சொல்லும்படி அவர்கள் சென்றபோது, அவர்களுக்கு எதிர்ப்பட்டது யார்?
5. எருசலேமைத் தவிர வேறொரு இடத்தில் சீஷர்கள் தம்மைச் சந்திக்க வேண்டுமென்று இயேசு கூறினார். அது எந்த இடம்?
6. மலையில் இயேசு சீஷர்களுக்கு மிக முக்கியமான கட்டளையைக் கொடுத்தார். இயேசுவின் வார்த்தைகளைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்:

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் __________________, பிதா குமாரன் __________________நாமத்திலே அவர்களுக்கு __________________கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்."

# ஆவிக்குரிய சத்தியங்கள் - பாடம் 7

## மத்தேயு 27-28

1. இயேசு இன்றும் உயிரோடு இருக்கிறார். கைது செய்யப்பட்டு, கொல்லப்படும் அளவுக்கு இயேசு ஒரு மனிதனாக இருக்கவில்லை. அவர் நித்திய தேவனாக இருக்கிறார். அவருக்குத் துவக்கமும் கிடையாது, முடிவும் கிடையாது. ஒரு பாடுபடும் தாசனாக மனித உருவில் உலகத்துக்கு அவர் வருவார் என்பது உலகத் தோற்றத்துக்கு முன்பே தேவனால் திட்டமிடப்பட்டிருந்தது. அன்று இந்த வகையில் அவர் சிலுவையில் அறையப்படுவது அவருடைய சித்தமாக இருந்தது. அவருடைய திட்டங்களை மாற்ற முடியாது, எவரும் அவரை மேற்கொள்ள முடியாது. அவர் இப்போதும் எப்போதும் தேவனாக, ஒரே மெய்யான ஜீவனுள்ள தேவனாக இருக்கிறார்.

2. தான் மூன்றாம் நாள் உயிரோடு எழுவேன் என்று இயேசு கூறிய வார்த்தைகளை நம்பிய பரிசேயர்கள் கல்லறைக்குக் காவல் போட்டார்கள். நடந்ததைப்பற்றிப் போர்வீரர்கள் அவர்களிடம் கூறியபோது அவர்கள் அதை நம்பினார்கள். இதைப் பற்றிப் பொய் சொல்லும்படி அவர்கள் போர்வீரர்களுக்கு இலஞ்சம் கொடுத்தார்கள். யோவான்ஸ்நானன் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தபோதும், இதே சமயத் தலைவர்கள் அங்கே இருந்தார்கள். அவர் யார் என்பதை வானத்திலிருந்து வந்த சத்தம் உறுதிப்படுத்தியது. அவர் செய்த பல அற்புதங்களை இவர்கள் கண்டிருக்கிறார்கள். ஓய்வுநாளில் அவர் சூம்பிய கையையுடையவனைக் குணமாக்கினார் என்பதற்காக அவர்மீது கோபப்பட்டார்கள். அவர் பிசாசினால் துன்புறுத்தப்பட்டவர்களிலிருந்து பிசாசுகளை விரட்டுவதை அவர்கள் கண்டிருந்தார்கள். மக்களின் பாவங்களை அவர் மன்னிப்பதைப் பார்த்திருந்தார்கள். பரிசேயர்களைப்போல இயேசுவின் வாழ்க்கையையும் செய்தியையும் குறித்து அறிந்தவர்கள் வேறு எவரும் கிடையாது என்றுகூடக் கூறலாம். ஆனால் இந்த மக்கள் அவர் அருளிய தேவனுடைய அன்பைத் தங்கள் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பவில்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கையின் கட்டுப்பாட்டை இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழாக ஒப்புக்கொடுக்கவில்லை. இயேசு கிறிஸ்துவோடு உறவுகொள்ள வேண்டுமானால், அவருடைய வாழ்க்கை உண்மைகளை அறிந்து, நம்பினால் மட்டும் போதாது. இது வெறும் ஒரு புதிய, வித்தியாசமான சமயம் அல்ல. நாம் நமது பாவங்களைவிட்டு மனந்திரும்பி, அவரை விசுவாசித்து, அவருக்கு நமது வாழ்க்கையை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். அவர் நமது வாழ்க்கையின் ஆண்டவர் அல்லது தலைவராக விரும்புகிறார். நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளிலும் அவர் நம்மைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புகிறார்.

3. இயேசு யார்?

    - இயேசு ஒரு கன்னிகையினிடத்தில் பிறந்தார்.
    - தாம் தேவன் என்று இயேசு உரிமைகொண்டாடினார்.
    - இயேசு பல அற்புதங்களைச் செய்தார், தங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்பியவர்களை மன்னித்தார்.
    - நீதியுள்ள தேவனுக்கு முன்பாக நமது வாழ்க்கையிலுள்ள பாவங்களுக்கான தண்டனையைச் செலுத்தும்படி இயேசு சிலுவையில் மரித்தார்.
    - இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து இன்றும் உயிரோடு இருக்கிறார்.
    - நான் எனது பாவங்களைவிட்டு மனந்திரும்பி என் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

இயேசு ஒரு முன்மாதிரியாக இருக்கும்படி மரிக்கவில்லை என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. நீங்களும் நானும் நமது வாழ்க்கையில் செய்த எல்லாத் தவறான காரியங்களுக்காகவும் தேவனை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் இயேசு நமக்குப் பதிலாக மரித்தார்.

**`` கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்'' என்று வேதாகமம் சொல்லுகிறது (ரோமர் 10:13).**

❖ அதாவது, எனது கடந்த காலம் எப்படியிருந்தாலும், இயேசு எனது வாழ்க்கையில் வரும்படி வேண்டிக்கொள்ளும்போது, அவர் என்னுடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்து, என் வாழ்க்கையில் ஜீவிக்கும்படி வருகிறார்.

❖ அதாவது, என்னுடைய இருதயத்தில் இயேசு பிரவேசிக்கும் அந்தக் கணத்திலிருந்து, என்னுடைய கடந்த காலப் பாவங்களும், நிகழ்காலப் பாவங்களும், எதிர்காலப் பாவங்களும் தேவனுக்கு முன்பாக ஏற்கெனவே மன்னிக்கப்பட்டிருக்கின்றன. நான் செய்த எதுவும் இதற்குக் காரணமல்ல. நான் நல்லொழுக்கமுள்ள ஒருவனாக மாறிவிட்டேன் என்பதும் இதற்குக் காரணமல்ல. என்னுடைய பெற்றோர் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது சமுதாய வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் இதற்குக் காரணமல்ல. இயேசு சிலுவையில் மரித்தபோது, ஏற்கெனவே செலுத்தித் தீர்த்த பலியை நான் ஏற்றுக்கொண்டதினால் மட்டுமே இது நடக்கிறது.

❖ அதாவது, அந்தக் கணத்திலிருந்து நான் தேவனுடைய கண்களுக்கு முன்பாகத் தூய்மை யானவனாக, ஒரு பாவமும் அறியாதவனாக இருக்கிறேன். பாவத்தின் சம்பளம் மரணம் என்று வேதாகமம் போதிக்கிறது. ஆனால் நான் அவரைப் பின்பற்றுவதைத் தெரிந்துகொள்ளுவேன் என்றால், கிறிஸ்துவின் மரணம் என்னை ஒரு புதுச் சிருஷ்டியாக மாற்றுவதற்குப் போதுமானதாக இருக்கிறது.

இப்போதே உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய மன்னிப்பைப் பெற விரும்புவீர்களானால், கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒருவராக மாற விரும்புவீர்களானால், இப்போதே உங்கள் இருதயத்தில் வரும்படி அவரை வேண்டிக்கொள்ளலாம். எந்தவொரு ஆலயத்திலும் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. எந்த விசேஷித்த அல்லது மந்திர வார்த்தை களையும் சொல்ல வேண்டும் என்பது அவசியமில்லை. நீங்கள் தேவனுக்கு முன்பாக வந்து, இயேசுவே தேவன் என்று விசுவாசிப்பதாக அறிக்கையிட்டு, அவரை உங்கள் வாழ்க்கையில் ஆண்டவராக அல்லது கட்டுப்படுத்துபவராக ஏற்றுக்கொள்ள விரும்புவதாகச் சொல்ல வேண்டும்.

இப்படிப்பட்டதொரு ஜெபத்தை ஏறெடுக்கலாம்:

"பிதாவே, நான் ஒரு பாவி என்பதை அறிவேன். என்னுடைய பாவங்களிலிருந்து என்னை இரட்சிக்கும்படியாக இயேசு சிலுவையில் மரித்து, கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தார் என்று நான் விசுவாசிக்கிறேன். எனது பாவங்களிலிருந்து நான் மனந்திரும்புகிறேன். என்னுடைய வாழ்க்கைக்குள் வந்து என்னுடைய எல்லாப் பாவங்களையும் மன்னியும். எனது வாழ்க்கையை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். என்னிடத்தில் அன்புகாட்டுவதற்காக உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்."

4. "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்."

யோவான் 14:2, 3 வசனங்களில் வேதாகமம் "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்'' என்று சொல்லுகிறது.

தனது வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொருவரும் அவரோடுகூடப் பரலோகம் என்ற இடத்தில் நித்தியத்தைக் கழிப்பார்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார். பரலோகம் பிதாவினுடைய வீடாகும். இயேசுவை நாம் நமது வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளும்போது நித்தியத்தை அவரோடு கழிப்போம். அதாவது, பூமியில் அவர் நம்மோடுகூட இருப்பார், நாம் மரிக்கும்போது, பரலோகத்தில் நித்தியத்தை அவரோடுகூடக் கழிப்போம்.

**இயேசு நம்மீது கொண்டிருக்கும் அன்பு நிச்சயமாக நிலைத்திருக்கிறது!**

## சுவிசேஷத்தை அறிவித்தல்

**(இந்த ஆறு வசனங்களும் சுவிசேஷத்தின் சாராம்சத்தை விளக்குகின்றன).**

### 1. உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய நோக்கம்

1 யோவான் 5:13 வசனத்தில் வேதாகமம் "**உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக் கிறேன்**" என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: தேவன் மனிதர்மீது கொண்டிருக்கும் அன்பின் காரணமாக அவர்களுக்கு நித்திய ஜீவனின் நிச்சயத்தைக் கொடுக்க விரும்புகிறார் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: நித்திய வாழ்வு என்பது இரண்டு காரியங்களாகும்:

1) நீங்கள் இந்த வாழ்க்கையில் வாழும்போதே இயேசு கிறிஸ்துவை அறிந்து அவருடைய சமாதானத்தை உங்கள் இருதயத்தில் கொண்டிருத்தல் (யோவான் 17:3).
2) நீங்கள் மரித்த பிறகு பரலோகத்தில் இயேசு கிறிஸ்துவோடுகூட நித்தியமாக வாழுதல் (யோவான் 14:1-3).

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: நீங்கள் நித்திய வாழ்வின் நிச்சயத்தைப் பெற விரும்புகிறீர்களா?

**கவனிக்கவும்: கிறிஸ்தவ அல்லது கிறிஸ்தவரல்லாத கலாச்சாரங்களின் அடிப்படையில்** இந்தச் சொற்களுக்குத் தெளிவான விளக்கம் கொடுக்க வேண்டும். இதற்கு அதிகமான நேரம் பிடிக்கும்.

### 2. உங்களுடைய தேவை

ரோமர் 3:23 வசனத்தில் வேதாகமம் "**எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி...**" என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: நாம் எல்லோரும் பாவிகள் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: பாவம் என்றால் என்ன? பாவம் என்பது தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதாகும். எடுத்துக்காட்டாக, நாம் எல்லோருமே பொய்சொல்லுதல், கோபப்படுதல், கசப்பு, பேராசை, இச்சை, பெருமை ஆகிய பாவங்களைச் செய்திருக்கிறோம்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: நீங்கள் பாவம் செய்திருக்கிறீர்கள் என்பதை உணர்கிறீர்களா? பாவத்தின் பின்விளைவு என்ன?

ரோமர் 6:23 வசனத்தில் வேதாகமம் "**பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்**" என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: நாம் எல்லோரும் நமது பாவங்களுக்காக மரணத்துக்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: மரணம் என்றால் என்ன? மரணம் என்பது தேவனிடமிருந்து இரண்டு வழிகளில் பிரிக்கப்பட்டிருப்பதாகும்:

முதலாவதாக, மரணம் என்பது இந்த வாழ்க்கையிலேயே தேவனிடமிருந்து பிரிக்கப் பட்டிருப்பதாகும். இது சந்தோஷமோ அல்லது ஆத்துமாவில் சமாதானமோ இல்லாத வாழ்க்கையாகும். இது உங்கள் இருதயத்தில் இயேசு இல்லாத, நித்திய வாழ்வைக் குறித்த நிச்சயமில்லாத வாழ்க்கையாகும். தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருப்பது மனிதனுக்கு வெறுமையான, பயமுள்ள இருதயத்தைக் கொடுக்கிறது.

இரண்டாவதாக, மரணம் என்பது தேவனிடமிருந்து நரகத்தில் நித்தியமாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகும். இது நித்தியத்துக்கும் கிறிஸ்து இல்லாத வாழ்க்கையாகும். வேதாகமம் சொல்லுகிறபடி, நாம் எல்லோருமே, நமது பாவங்களின் காரணமாக, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட மரணத்துக்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: நீங்கள் உங்கள் பாவத்தின் காரணமாக, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, மரணத்துக்குத் தகுதியாக இருக்கிறீர்கள் என்பதை உணர்கிறீர்களா?

## 3. தேவன் அருளுவது...

ரோமர் 5:8 வசனத்தில் வேதாகமம் "**நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்**" என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: தேவன் நம்மிடத்தில் அதிகமாக அன்புகூருகிறபடியால், நமது பாவங்களுக்காக மரிக்கும்படி அவர் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொடுத்தார் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: பாவத்துக்கான ஒரே தண்டனை மரணமாகும். நமது இடத்தில், நமது பாவத்துக்கான தண்டனையைச் செலுத்தும்படியாக, இயேசு கிறிஸ்து தண்டிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்பட்டு, சிலுவையில் மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

இயேசுவின் மரணமே பாவத்தின் குற்றத்திலிருந்து மனிதனை விடுவிக்க ஒரே போதுமான பலியாக இருக்கிறது. பலர் தங்களுடைய நல்ல வாழ்க்கை அல்லது நல்ல செயல்களைச் சார்ந்து பல வழிகளிலும் தேவனிடத்தில் வருவதற்கு முயலுகிறார்கள். பரிசுத்தவான்கள், விக்கிரகங்கள், சொரூபங்கள், ஆவிகள் அல்லது அவதாரங்களின் மூலமாகவும் அவர்கள் தேவனிடத்தில் வர முயலுகிறார்கள்.

மனிதன் தனது சொந்த முயற்சிகளால் பாவத்தைச் சுத்திகரிக்க முடியாது. தேவனோடு உறவு கொள்ளுவதற்கான ஒரே வழி இயேசு கிறிஸ்துவின் மூலமாகச் செல்லுவதாகும். நமது பாவங்களுக்காக இயேசு சிலுவையில் மரித்த பிறகு, அவர் மரணத்தை வெற்றிகொண்டு, உயிரோடு எழுந்தார். அவர் இப்போதும் உயிரோடு இருக்கிறார், உங்கள் இருதயத்தில் வாழ விரும்புகிறார்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: இயேசு கிறிஸ்து உங்கள் ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும், மத்தியஸ்தராகவும் இருக்கிறார் என்பதை விசுவாசிக்கிறீர்களா?

## 4. உங்கள் பதில்

ரோமர் 10:9 வசனத்தில் வேதாகமம் "**கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்**" என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: இயேசு கிறிஸ்துவை உங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: இயேசுவை ஏற்றுக்கொள்ள நீங்கள் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும்:

1) முதலாவதாக, இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், கிறிஸ்துவை உங்கள் ஒரே ஆண்டவராக அறிக்கையிட வேண்டும். நீங்கள் உங்கள் பாவங்களைவிட்டுத் திரும்பி கிறிஸ்துவைப்பின்பற்றவேண்டும்.அதாவதுஉங்கள்வாழ்க்கையின்முழுக்கட்டுப்பாட்டையும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். இதுவே மனந்திரும்புதலாகும்.

2) இரண்டாவதாக, இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் என்றும் அவரே உங்கள் ஒரே இரட்சகர் என்றும் விசுவாசிக்க வேண்டும். நித்திய ஜீவனை அடைய வேண்டுமானால், நல்லொழுக்கம், நல்ல செயல்கள், விக்கிரகங்கள், சொரூபங்கள், பரிசுத்தவான்கள் அல்லது அவதாரங்களின்மீது உங்களப் பார்வையை வைப்பது உங்களை இரட்சிக்கமாட்டாது.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடவும், உங்கள் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுக்கவும் நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா? மற்றக் காரியங்களின்மீது நம்பிக்கை வைப்பதை விட்டுவிட்டு, இப்போதே இயேசு கிறிஸ்துவை உங்கள் ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு அவருக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்க ஆயத்தமாக இருக்கிறீர்களா?

ரோமர் 10:13 வசனத்தில் வேதாகமம் “**கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்**” என்று சொல்லுகிறது.

இந்த வசனத்தின் நோக்கம்: இயேசுவின் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரும் இரட்சிப்படைவார்கள் என்று காட்டுவது.

இந்த வசனத்தின் விளக்கம்: இப்போதே நீங்கள் உங்கள் இருதயத்தில் இயேசுவை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ள முடியும்.

இந்த வசனத்தைச் செயல்படுத்துதல்: இயேசுவுக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்து, இப்போதே அவர் உங்கள் வாழ்க்கையில் பிரவேசிக்கும்படி வேண்டிக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறீர்களா? நீங்கள் ஆயத்தமாக இருப்பீர்களானால், உங்கள் முழு இருதயத்தோடும் இந்த ஜெபத்தைத் தேவனிடம் எறெடுங்கள்:

> “ஆண்டவரே, நான் ஒரு பாவி. எனது ஒரே ஆண்டவராகவும், இரட்சகராகவும், மத்தியஸ்தராகவும் நான் உம்மீது என் நம்பிக்கையை வைக்கிறேன். எனது வாழ்க்கையை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். எனது இருதயத்துக்குள் வந்து, இப்போதே என்னை இரட்சியும். என்னை மாற்றி, எனது வாழ்க்கையின் முழுக் கட்டுப்பாட்டையும் எடுத்துக்கொள்ளும். ஆமென்.”

இயேசு உங்கள் ஜெபத்துக்குப் பதிலளித்திருக்கிறார் என்று நம்புகிறீர்களா? இயேசு இப்போது எங்கே இருக்கிறார்? நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?